உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 01 வெள்ளிக்கிழமை (14.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :49

### நிவாரண மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு

# மூவினப் பிரதிநிதிகளுடன் செயலணி அமைப்பதற்கு புலிகள் யோசனை!

## ஆனால் பதில் தராமல் அரசு இழுத்தடிப்பதாகக் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஜனவரி14

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்றுள்ள தமிழர் தாயகப் பிரதேசத்திலும் ஏனைய இடங்களிலும் சர்வதேச சமூகத்தின் உதவியை சரிவரப் பயன்படுத்தி நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காகத் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய முத்தரப்பினரையும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளையும் கொண்ட செயலணிகளைத் தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் அமைப்பதற்கான யோசனை ஒன்றை அரசுக்கு முன்வைத்திருக்கின்றார்கள் புலிகள்.

ஆனால், அரசுத் தரப்போ இந்த யோசனைக்குப் பதில் தராமல் இழுத்தடிப்பதாகப் புலிகள் தரப்பில் குற்றச்சாட்டுக் கூறப்படுகின்றது.

அத்தோடு இந்த விடயத்தில் இணக்கமான முடிவு ஒன்று எட்டப்படுவதற்கு விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுக்காமல் காலத்தைக் கடத்தும் அரசுத்தரப்பு, புலிகளோடு தனக்கு இணக்கமான நிலை உள்ளதுபோல் சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக்கொள்ளும் வகையில் நடிக்கின்றது என்றும் புலிகள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

புலிகளின் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை குறித்து புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் 'உதயனு'க்கு நேற்றுத் தெரிவித்ததாவது -

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகிய முத்தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதிப்பிலும் பேரழிவிலும் இருந்து

(20ஆம் பக்கம் பார்க்க)

**இன்றைய பொங்கல் நாளில்...**

வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், விநியோகத்தர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உதயனின் மனமுவந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

சுனாமிக் கடற்கோள் அனர்த்தத்தின் கோர விளைவுகளில் இருந்து எமது உறவுகள் எழுந்து விரைவில் புதுவாழ்வுகாண வழிசெய்வோம். அதன் பொருட்டே அனைவரும் மனங் கொண்டுழைக்க இந்த் பெருநாளில் உறுதியெடுப்போமாக.

**உதயன் நாள்காட்டி 2005 நான்கு வர்ணங்களில் உள்ளே....**

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் என அறிவிப்பு

கொழும்பு,ஜன.14

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் பவன தாழமுக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் - இதனால் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் - வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் கிழக்குக் கரையோரத்தில் இருந்து சுமார் 650 கிலோ மீற்றர் தெற்கேயுள்ள பிரதேசத்தல் உருவான பவன தாழமுக்கம் வலுவடையும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இதனால், ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து முன்கூட்டியே அறிவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-12-51)

## சுனாமி பாதித்த புலிகள் பகுதி மக்களுக்கான அரசின் நிவாரண நடவடிக்கை ஒழுங்கில்லை

### கண்காணிப்புக்குழுவிடம் கேணல் சொர்ணம் முறையீடு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரச நிவாரண உதவிகள் ஒழுங்காக இடம்பெறவில்லை என்று புலிகளின் திருகோணமலைத் தளபதி கேணல் சொர்ணம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் புருஹொவ்டேயை சம்பூரிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்துப் பேசியபோதே தளபதி சொர்ணம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். நேற்றுக்காலை 10.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் சந்திப்பில் கலந்துகொண்டார். சந்திப்பில் அரசின் செயற்பாடு குறித்தும் படையினரின் செயற்பாடு குறித்தும் விடுதலைப் புலிகளினால் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

திருகோணமலையில் இடம்பெறும் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவம் தலையிடுவது குறித்தும் -

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதியான கலாநிதி விக்னேஸ்வரனை நிவாரணப் பணிக்கான விசேட செயலணிக் குழுவில் நியமித்துள்ளமை திருகோணமலையில் தமக்கும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் எந்தப் பாகுபாடுமின்றிக் கட்டியெழுப்பப்படும்

### தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின் உலகவங்கிப் பிரதிநிதி

கிளிநொச்சி.ஜன.14

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை எவ்வித பாகுபாடுமின்றி மீளக் கட்டியெழுப்புவதே எமது முக்கியநோக்கம்.

- இவ்வாறு தெரிவித்தார் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள்குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை உலக வங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் நேற்று சந்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைவரும் கனேடியப் பிரதமரும் புலிகளின் பகுதிக்குச் செல்லமாட்டார்

றொறண்டோ.ஜன.14

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக வரும் கனேடியப் பிரதமர் போல் மார்டின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிடமாட்டார் என்று தெரிகின்றது.

கனேடியப் பிரதமரின் விஜயத்தைத் திட்டமிடும் அதிகாரிகளை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சுனாமி பாதித்த இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் உட்பட 5 நாடுகளுக்கான கனேடியப் பிரதமரின் ஆசிய விஜயம் இன்று நள்ளிரவுக்குப் பின் ஆரம்பமாகின்றது. அவர்

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தின் கணிப்பீட்டில் உயிரிழந்தோர் ஆயிரத்து 256 பேர்

யாழ். மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இறந்தவர்களின் தொகை ஆயிரத்து 256 என யாழ். மாவட்டச் செயலகத்தினால் உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 14 பேரும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் 17 பேரும் காரைநகரில் 2 பேரும் பருத்தித்துறையில் 112 பேரும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் 71 பேரும் குடத்தனையில் 2 பேரும் மருதங்கேணியில் ஆயிரத்து 32 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இந்த அனர்த்தத்தினால் ஆயிரத்து 647 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் -

ஆயிரத்து 240 பேர் காணாமற்போயுள்ளனர் எனவும் -

புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

காணாமற்போனவர்கள் பெரும்பாலும் இறந்திருக்கலாம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ-202-203)

## கனடா வழங்கும் உதவிகள் அரசின் கைக்குக் கிட்டாது

### அந்நாட்டு எம்.பி. யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.14

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கனடாவின் உதவிப் பொருள்கள் அரசிடம் நேரடியாகக் கையளிக்கப்படமாட்டாது. அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவே அவை விநியோகிக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் ஆரியோனாஸ்.

சுனாமி பாதித்த இடங்களைப் பார்வையிடுவதற்கென யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள இவர், நேற்றிரவு யாழ்.நகரில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். இந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சுனாமி பாதித்த மக்களுக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வின் 4ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

## திங்களன்று கைலாசபதி கலையரங்கில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் 4ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில், பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், பொங்குதமிழ்ப் பிரகடனம் மற்றும் சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழ் மக்கள் பாரிய இராணுவ அழுத்தங்களுக்கு முகம் கொடுத்திருந்தவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுத் தமது அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, தனித்தேசிய இனம், மரபுவழித் தாயகம் என்பவற்றை வலியுறுத்தி தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து உலகிற்குணர்த்திய பொங்குதமிழ் நிகழ்வில் 4ஆம் ஆண்டு நிறைவுநாளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-5-ரி)

# தமிழீழ மாணவர் பேரவை பிரதிநிதிகள் நோர்வேயில்

யாழ்ப்பாணம்,ஜன.14

கடந்தமாதம் நோர்வேக்குச் சென்ற சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பிரதிநிதிகள் அங்குள்ள தமிழ் அமைப்புக்கள் மற்றும் மாணவர் அமைப்புக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

இச்சந்திப்பின்போது தமிழீழ மாணவர்களின் கல்விநிலை, தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் இராணுவ அழுத்தங்கள், விடுதலைப்போராட்டத்தில் தமிழ் மாணவர்களின் செயற்பாடுகள், இன்றைய அரசியல் நிலை என்பவை தொடர்பாகத் தெளிவுபடுத்தி வருகின்றனர்.

இதேவேளை -

சுனாமி அனர்த்தத்தால் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், அதன் பின்னான அரசியல் நிலைவரங்கள் தொடர்பான கூட்டங்களையும் அவர்கள் நடத்தி வருகின்றனர். (ஐ-202)

# வழமைபோலில்லாமல் பொங்கல் கண்ணீரில் பொங்கி நிற்கின்றது

## மாவை எம்.பியின் பொங்கல் செய்தி

யாழ்ப்பாணம்,ஜன.14

தைப்பொங்கல் பண்டிகை வழமைபோல் இல்லாமல் கண்ணீர்க் கடலில் வேதனையால் நம் இதயமெல்லாம் பொங்கி நிற்கின்றது என்று தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

தை பிறந்தால் வழி பிறக்கும் எனும் நம்பிக்கை ஆண்டாண்டு காலமாகத் தமிழ் மக்களிடம் நிலவிவருகின்றது.

காரிருள் கவிழ்ந்து மழை பொழிந்து நிலம் செழித்து வளம்பெருகி மக்கள் வாழ்க்கையில் செல்வமும் சீரும் சிறப்பும் தைத்திங்களில் பெற்று இயற்கையோடு இயங்கி உழைத்து வாழ்ந்திடும் வாழ்வியலையே பொங்கல் பண்டிகை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பகலவனுக்கும், நீர், நிலத்திற்கும் மாட்டுச் செல்வத்திற்கும் நன்றிதெரிவிக்கும் விழாவாகவும் வேளாண்மைக்கும் உழைப்பிற்கும் மதிப்பளித்துப் போற்றி வாழும் பண்பாட்டு விழாவாகவும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வருவது தமிழர் சமுதாயத்தின் உயர் நாகரிகத்தை உலகிற்கு விளக்கி நிற்கிறது.

கடந்த 20 ஆண்டுகளில் நம் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களையும் இழப்புக்களையும் தாங்கி நின்று தை பிறந்தால் வழிபிறக்காதா என்னும் ஆதங்கத்துடன் பொங்கற்பண்டிகையை எதிர்நோக்கியிருந்தனர்.

ஆனால், நத்தார் பண்டிகை ஆரம்பித்த அடுத்த நாள் இலங்கையுள்ளிட்ட பல நாடுகளில் இயற்கை அனர்த்தம் சுனாமி கடற்பேரலையால் ஏற்பட்ட அழிவுகளினால் நத்தார் பண்டிகையும் சோபை இழந்தது.

கடல் பொங்கி எழுந்ததால் நம் தமிழ்ச் சகோதரர்கள் குடும்பம் குடும்பமாய் கடலுக்குப் பலியாகி, இருந்ததனைத்தையும் இழந்து கண்ணீரும் கம்பலையுமாய் மண்ணில் வீழ்ந்து கிடக்கின்றனர்.

இவ்வேளையில் தைப்பொங்கல் பண்டிகையும் வழமைபோல் இல்லாமல் கண்ணீர்க் கடலில் வேதனையால் நம் இதயமெல்லாம் பொங்கி நிற்கிறது. எம் வாழ்நாளில் இத் துன்ப துயரங்கள் அன்றாட வாழ்க்கையாகிவிட்டது. இருப்பினும் எவ்வழியிலிருந்தும் எழுந்து வாழ்வோம். விடுதலை பெற்ற இனமாய் வாழ்வோம் எனும் நம்பிக்கையுடன் எம் தமிழ்ப்பண்பாடு காத்து இம்முறை அமைதியாய் தைத்திருநாளைக் கொண்டாடுவோம். இதயம் பொங்கிய என் வாழ்த்துக்கள் - என்றுள்ளது. (3)

# யாழ். ஆஸ்பத்திரியில் சிப்பாயின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

திடீரென இறந்துவிட்டதாகத் தெரிவித்துச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மானிப்பாய் இராணுவமுகாமைச் சேர்ந்தவரான பி.டி.டின்னா (வயது 26) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்ட இச்சடலம் பிரேத பரிசோதனைக்கு கொழும்புக்கு அனுப்பும் பொருட்டு நேற்று அந்தமுகாம் இராணுவத்தினரால் கையேற்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது. (எ-15)

# மண்டல விரதம் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஜன.14

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு சபரீச ஐயப்பன் ஆலயத்தில் மண்டலப் பூர்த்திவிழா இன்று வெள்ளிக்கிழமை பொங்கல் தினத்துடன் நிறைவுபெறுகின்றது.

இன்று மாலை ஐயப்பனுக்கு விசேட பூசை ஆராதனைகள், ஆலய தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ கி.அரிகரசுதசர்மா தலைமையில் நடைபெற்று, தொடர்ந்து ஐயப்பனின் திரு ஆபரணப் பெட்டி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக ஐயப்பன் ஆலயத்திற்கு எடுத்துவரப்படும். அதனைத் தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெற்று, ஐயப்பனுக்குத் திரு ஆபரணங்கள் அணிவிக்கப்படும். தொடர்ந்து மகரஜோதிப் பெருவிழா இடம்பெறும்.

மகரஜோதிப் பெருவிழா நிறைவடைந்ததும் சபரிமலை சென்று வந்துள்ள குருசாமிமார் மலை செல்ல இயலாது இங்கு விரதமனுட்டிக்கும் சுவாமிமார்களுக்கும் பக்தர்களுக்கும் ஆசீர்வதித்துச் சபரிமலைப் பிரசாதமும் வழங்குவர்.

நாளை சனிக்கிழமை காலை மண்டல விரதத்தை நிறைவுசெய்த பக்தர்களுக்கு ஆலயத்தில் குருசுவாமி பிரம்மஸ்ரீ கி.அரிகரசுதசர்மா மாலை கழற்றி விரதத்தைப் பூர்த்திசெய்வார்.(ஐ)







முல்லைத்தீவுப் பகுதியின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையுடன் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பொதுமக்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். அவர்களையும் படத்தில் காணலாம்.

*(படங்கள்: சி.கேசவன் விசுவமடு செய்தியாளர்)*

# அருட்சகோதரி நிர்மலா குடாநாட்டுக்கு வருகை

## இறந்தோருக்காக தாளையடிக் கரையில் அவர் செபம்

கொழும்புத்துறை,ஜன.14

கல்கத்தாவில் உள்ள அன்னை தெரேஸா அமைதி இல்லப் பொறுப்பாளர் அருட்சகோதரி நிர்மலா யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அனர்த்தப் பகுதிகளைப் பார்வையிட்டார்.

கடந்த புதனன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அருட்சகோதரியும் அவரது குழுவினரும் 'சுனாமி' அனர்த்தம் நிகழ்ந்த வடமராட்சி பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

தாளையடி மற்றும் வடமராட்சிக் கரையோரங்களுக்குச்சென்ற அருட்சகோதரி நிர்மலா அங்குள்ள அகதிகள் நலன்புரி நிலையங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுடன் உரையாடி ஆறுதல் கூறினார்.

யாழ்ப்பாணம், கோப்பாயில் அமைந்துள்ள அன்னை தெரேஸா அமைதி இல்லத்தையும் பார்வையிட்டார்.

சுனாமிப் பாதிப்பு பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கும் போது:-

மிகவும் கவலைக்குரிய இழப்புக்களை தந்த அனர்த்த நிலைமைகளைக் கண்டு நான் வேதனையடைகின்றேன். வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், அழிந்துள்ளன. மக்களின் வாழ்வு நிலைகள் பின்தள்ளப்பட்டுள்ளன. உயிரிழந்தோரது குடும்பங்கள் துயரில் மூழ்கியுள்ளன.

இறந்த ஆன்மாக்களுக்காகவும் பாதிக்கப்பட்டோர் ஆறுதல்பெறவும் வேண்டி எமது சபை அருட்சகோதரிகள் தொடர்ச்சியாக செபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகெங்கும் உள்ள 137 நாடுகளில் 718 அமைதி இல்லங்களிலும் சுனாமியால் அழிவுற்றவர்களுக்காகச் செபிக்கிறார்கள் - என்று தெரிவித்தார்.

பலியான அனைவருக்காகவும் தாளையடி கடற்கரையில் விசேட செப வழிபாடு ஒன்றையும் அவர்கள் மேற்கொண்டனர்.

யாழ். ஆயரையும் சந்தித்துக் கலந்துரையாடிய அருட்சகோதரி நிர்மலா நேற்று கொழும்பு திரும்பினார். (ஐ-30)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு ஜனசக்தி காப்புறுதி நஷ்டஈடு

கொழும்பு,ஜன.14

சுனாமி அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்கள் தமது காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் கேட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டுடன் காப்புறுதிக் கொடுப்பனவுகளை வழங்க ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் முன்வந்துள்ளது என்றும் -

காப்புறுதிப்பத்திரத்தை இழந்தவர்களும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும், மாலைதீவிலும் ஏற்பட்ட இழப்பீட்டுக்கு கொடுப்பனவு வழங்க ஐநூறு கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் -

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# சுனாமி சேதங்களின் மதிப்பீடுகள் இரண்டு வாரங்களில் வெளிவரும்

## உலக வங்கியின் தலைவர் தெரிவிப்பு

வாஷிங்ரன், ஜன.14

சுனாமி ஆழிப்பேரலையால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் பற்றிய பூர்வாங்க மதிப்பீடுகள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியாகும் என உலக வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

புனர்நிர்மாணப் பணிகளுக்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறது என்பதை முழுமையாகக் கண்டறிவதற்குப் பல மாதங்கள் கூட எடுக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கடன் வழங்கும் நாடுகள் அடங்கிய 'பாரிஸ் கிளப்', பாதிக்கப்பட்ட நாடுகளின் கடன் அறவீட்டை இடைநிறுத்துவது எனத் தீர்மானித்திருக்கின்றது. இதற்குப் பின்னரே உலக வங்கித் தலைவரின் இக்கருத்துக்கள் வெளியாகியிருக்கின்றன.

எந்தெந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்பதைத் தெளிவாகப் பட்டியலிட்டு, மீள் கட்டமைப்பு நடைமுறையை அணுகவேண்டும் என அமெரிக்காவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உலக வங்கித் தலைவர் கூறினார்.

இதேவேளை - பூகம்பப் பேரலைகளின் விளைவாக சுமார் 20 லட்சம் பேர் வறியவர்களாக ஏழைகளாக - மாறக்கூடும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம் மீதான மொத்தத் தாக்கம் குறைவானது.

ஆனால், நலிவான சமூகம் பளுவைச் சுமக்கவேண்டி இருக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணர் ஒருவர் கூறினார். அதன் ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கைகளின்படி இந்தோனேஷியாவில் மட்டும் பத்து லட்சம் பேர் வறுமைக் கோட்டின் கீழ் என்ற எல்லைக்குள் தள்ளப்படுவார்கள்.

இந்தியாவில் வறியவர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து 45 ஆயிரமாகவும், இலங்கையில் 2 லட்சத்து 50 ஆயிரமாகவும் அதிகரிக்கலாம் என வங்கியின் பிரதம பொருளாதார நிபுணர் இப்ஸாத் சாலி தெரிவித்தார். (ஐ-க)

# படகு கவிழ்ந்து பீகார் மாநிலத்தில் 30 பேர் பலி!

பீகார்,ஜன.14

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் படகு ஒன்று கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் படகில் 50 பேர் சென்றுள்ளனர். கரையைநெருங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே படகு ஆற்றில் கவிழ்ந்து நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது. 20பேர் நீந்திக் கரையைச் சேர்ந்தனர். 30 பேர் தண்ணீரில் மூழ்கிப் பரிதாபமாகப் பலியாகினர். இவர்களில் 4 பேருடைய சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய சடலங்களைத் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தீயணைப்புப் படையினர் மற்றும் நீச்சல் வீரர்கள் ஆற்றில் இறங்கி உயிரிழந்தவர்களைத் தேடிவருகிறார்கள்.

பயணிகள் அதிகமாக இருந்தமையே படகு கவிழ்ந்தமைக்கான காரணம் என்று ஆரம்ப பொலீஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-க)

# கொபி அனான் மீது அமெரிக்கா அதிருப்தி

வாஷிங்ரன்,ஜன.14

உணவுக்கு எண்ணெய்த் திட்டத்தில் நடந்த தவறான நிர்வாகத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானே பொறுப்பேற்கவேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

'தொலைக்காட்சி ஒன்றிற்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் அளித்த விசேட செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

உணவுக்கு எண்ணெய்த்திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை அமுல்படுத்துவதில் பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிகிறது. இதில், ஏதாவது குற்றங்கள் செய்திருக்கிறதா என்று உறுதியாக எங்களுக்குத் தெரியவில்லை.

ஆனால், ஐ.நாவில் பிரச்சினை இருப்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு ஐ.நா. பொதுச்செயலாளா கொபி அனான் பொறுப்பேற்கவேண்டும். - என்றார்.

இதற்கு முன்னர் ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானின் மகனின் மீது ஈராக் உணவுத்திட்டத்தில் மோசடி செய்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். (ஐ-க)

# மலாக்கா நீரிணையின் ஆழம் குறைந்துள்ளது

கோலாலம்பூர்,ஜன.14


நிலநடுக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த கடல் கொந்தளிப்பால் மலாக்கா நீரிணையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மலாக்கா நீரிணையின் பல இடங்களில் ஆழம் குறைந்துள்ளது. பல இடங்களில் தண்ணீரில், சுனாமி ஏற்படுவதற்கு முன்பாக 4 ஆயிரம் அடியாக இருந்த ஆழம் 100 அடியாகக் குறைந்துள்ளது.

கப்பல்துறையின் இதழான 'போர்ட்ஸ் வேர்ல்ட்' இச்செய்தியை வெளியிட்டுள்ளதாக ஸ்டார் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புவியியல் ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட சோதனையிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது. மலேஷியாவையும் இந்தோனேஷியாவையும் பிரிக்கும் இடத்தில் இந்த நீரிணையில் 4,060 அடியாக இருந்த ஆழம் தற்போது 105 அடியாகக் குறைந்துள்ளது.

அதேபோல், மற்றொரு பகுதியில் 3,855 அடியாக இருந்த ஆழம் 92 அடியாகக் குறைநதுள்ளது. இவற்றைச் சீரமைக்கப் பல ஆண்டுகள் செல்லும் என்று தெரிகிறது. (ஐ-க)



கல்கத்தாவில் 'தேசிய கால்பந்து லீக் போட்டிகள்' நேற்று முன்தினம் ஆரம்பமாகின. முக்கிய அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரை ஆரம்பித்து வைத்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் செல்லமாகப் பந்தை உதைத்து வீரர்களை உற்சாகப்படுத்துவதைப் படத்தில் காணலாம்.

# சுனாமி முன்னெச்சரிக்கை அமைப்பு அடுத்த ஆண்டளவில் அமைக்கப்படும்

## யுனெஸ்கோ தலைவர் தகவல்

நியூயோர்க்,ஜன.14

இந்து சமுத்திரத்தில் நிலக் கீழ் பூகம்பமோ அல்லது 'சுனாமி' ஆழிப்பேரலைகளோ ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் - அபாயம் - இருக்கும் இடத்து அதனை முன்கூட்டியே அறிவிக்கும் - எச்சரிக்கும் - அமைப்பு அடுத்த ஆண்டு நடுப்பகுதியளவில் அமைக்கப்பட்டு, இயங்கக் கூடிய ஏதுவான நிலை இருக்கிறது.

இவ்வாறு யுனெஸ்கோ அமைப்பின் தலைமை இயக்குநர் கோய்ச்சீரோ மற்சூரா தெரிவித்தார்.

இயற்கையின் சீற்றங்களால் உலகில் உள்ள சிறு அளவிலான தீவுகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மொரீஷியஸ் தீவில் மாநாடொன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் உலக நாடுகள் பலவற்றைப் பிதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே யுனெஸ்கோ அமைப்பின் தலைவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்,

'2007 ஆம் ஆண்டளவில் அனைத்து உலகிற்கும் இயற்கை அனர்த்தம் குறித்து முன்னெச்சரிக்கை தெரிவிக்கும் அமைப்பு இயங்கும்' - என்றும் மற்சூரா குறிப்பிட்டார்.

அத்தோடு, இந்துசமுத்திரப் பகுதி நாடுகளில் பேரழிவை ஏற்படுத்திய சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தை முன்கூட்டியே கணித்துச் சொல்கின்ற வலைப்பின்னல் அமைப்பொன்றை ஏற்படுத்தாது விட்டது பெரும் தவறு என்பதை விஞ்ஞானிகள் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறானதோர் அமைப்பை உருவாக்கி இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா உட்பட ஏனைய நாடுகளும் கூட்டாகப் பயன்பெற வேண்டும் என்பதே இப்போதைய அனைத்துத் தரப்பினரதும் கோரிக்கையாகும். (ஐ-க)

# தாய்லாந்தில் சடலங்களைக் குதறுகின்றன நாய்கள்!

பாங்கொக்,ஜன.14

தாய்லாந்தில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் சடலங்களை தெருநாய்கள் தின்று குதறிவருகின்றன. இதனால், நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ள தன்னார்வத் தொண்டர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

தாய்லாந்தின் பாங்கா என்ற பகுதியில் உள்ள பௌத்த கோயில் தற்காலிகமாகச் சவக்கிடங்காகப் பயன்படுத்தப் பட்டுவருகிறது. அப்பகுதியில் பசியுடன் சுற்றித் திரியும் நாய்கள் சவக் கிடங்கிற்குள் நுழைந்து சடலங்களைத் தின்று வருகின்றன. அவற்றை விரட்டுவதற்காக மிருக வைத்தியர்களும், நிவாரண உதவியாளர்களும் அப்பகுதியில் முகாமிட்டுள்ளனர். தங்கி கண்காணித்து வருகின்றனர்.

இதுவரை 60நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

**உலக அரங்கில்**

40இற்கும் அதிகமான நாய்கள் இன்னமும் அப்பகுதியில் சுற்றித்திரிகின்றன. அவை பசியுடன் உள்ளன. இதனால், கிடைப்பதை எல்லாம் சாப்பிடுகின்றன. இறந்தவர்களின் சடலங்களைக் கூட தோண்டியெடுத்து உண்ணுகின்றன என்று தாய்லாந்தின் தெருநாய்கள் அறக்கட்டளை வைத்தியர் கியார் திசாக் தெரிவித்தார்.

தாய்லாந்தின் பாங்கா மாகாணத்திலேயே சுனாமிப் பேரலைகளில் சிக்கி அதிகமானவர்கள உயிரிழந்துள்ளனர். இங்கு சுமார் 4 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். என மதிப்பிடப்பட்டுள்ளது ஏறக்குறைய 2ஆயிரம் சடலங்கள் மேற்படி பௌத்த கோயிலில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகச் சவக்கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை குளிர் சாதனப் பெட்டிகளில் உள்ளன.

இதேவேளை, புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் பைகளில் வைத்து பிரேத பரிசோதனைக்காகவும் அடையாளம் காண்பிக்கவும் நிலத்தில் கிடத்தப்பட்டுள்ளன. இதனை மோப்பம் பிடித்து நாய்கள் உள்ளே புகுந்து விடுகின்றன. சில நாய்கள் மிகவும் சாதுர்யமாகச் சடலத்தை மூடிவைத்துள்ள பையைத் திறந்து உடலைச் சாப்பிடுகின்றன என்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

சுனாமிப் பேரலையின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்னர் இப்பகுதியில் இந்தளவிற்குத் தெருநாய்கள் இருந்ததில்லை. சுனாமியால் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் நாய்களே தற்போது ஆதரவு இன்றி இவ்வாறு வீதிகளில் சுற்றிவருகின்றன என்று உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர். (ஐ-க)



## பிற்போடப்பட்டுள்ளது

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினுடைய சமூகசேவை அர்ப்பணிப்பு நிதிக்காக 14.01.2005 ஆம் திகதி அதாவது இன்று வீரசிங்கம் மண்டபத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவிருந்த 'கலைகளின் சங்கமம்' நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 27.02.2005 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருவதுடன் மேற்படி நிகழ்ச்சிக்குரிய நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகிக்கொண்டிருப்பதனால் இந்நிகழ்ச்சிக்குரிய ஆதரவை நல்குமாறு அனைவரிடமும் அன்புடன் வேண்டுகின்றோம்.

CELEBRATE ROTARY

தலைவர். றோட்டறிக் கழகம், நல்லூர்.

(40811) (24-11-14)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அறிவித்தல்

'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பிரதேசங்களைச் சுத்திகரிப்பதற்கு சுகாதாரத் தொழிலாளர், வேலைத் தொழிலாளர் ஆகியோரது சேவைக்குத் தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே, இக்கடமையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 300/- வேதனமாக வழங்கப்படும். விரும்புவோர் நேரடியாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குச் சமுகமளித்து இக்கடமையில் ஈடுபடுமாறு வேண்டப்படுகின்றீர்கள். இந்நியமனம் முற்றுமுழுதாக தற்காலிகமானது.

நகராட்சி மன்ற அலுவலகம், வல்வெட்டித்துறை.

செ.திருஞானசம்பந்தர், செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

(சி-40416) (24-11-14)

## எழுச்சிப் பேரவையின் ஒன்று கூடல் நிகழ்வு

கொழும்புத்துறை,ஜன.14

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள பேரவையின் தலைமைப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ் மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள், கோட்டச் செயலாளர்கள், துறைசார்ந்த பிரதிநிதிகள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் சூ.சிறில் கேட்டுள்ளார். (3-30)


பிரிவு 02

D.C.M.

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)

A/L 2007

கலை வித்தகட்

ஆரம்பம்:

15 ஜனவரி 2005 - சனி காலை 8.00 மணி


## விவரங்களை அனுப்ப[...]று அறிவிப்பு

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட பகுதிகளில் உள்ளூராட்சிச் சபைகளினால் மேற்கொள்ளப்படும் குடி[...]ண்ணீர் விநியோகம், இடிபாடுகள் அகற்றல், சுகாதாரம் ஆகிய பணிகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

குடிதண்ணீர் விநியோகிக்கும் விதங்கள் (தண்ணீர்த்தொட்டி, நீர் இறைக்கும் இயந்திரங்கள், பவுஸர்கள்) துப்பரவுப் பணிகள், இடிபாடுகள் அகற்றலில் பயன்படுத்தப்படும் வாகனங்கள், உபகரணங்கள் துப்பரவு செய்யப்பட்ட பகுதி சுகாதாரப் பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சேவைகள், பணியாளர்கள் போன்ற விவரங்களையே அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார். (10-117-185)


தமிழ் உலகம்

London

அனைத்துலக தமிழ் சஞ்சிகை-ஜனவரி இதழ் யாழ். மாவட்டத்திலுள்ள செய்தித்தாள் விற்பனை நிலையங்களில் இப்பொழுது கிடைக்கிறது

* அதிரடி அரசியல் கட்டுரைகள்
* அமெரிக்காவின் பார்வையில் இலங்கை
* பிரிட்டிஷ் எம்.பியுடன் பேட்டி
* மருத்துவ கட்டுரை
* சோதிட பலன்
* English - Lesson
* திரை வலம்
* மழலைகள் மன்றம்
* குறுக்கெழுத்துப்போட்டி
* சிறுகதை/ தொடர்கதை
* யாழ். மாவட்ட கல்வி நிலை
* விஞ்ஞானம்/ தொழில்நுட்பம்

30/=

போன்ற சுவையான அம்சங்களுடன் கலகலப்பான வர்ணப்பக்கங்கள்



மக்கள் மனதில் சாந்தியும் சமாதானமும் பொங்கிப் பெருக,
இத்தைப்பொங்கல் திருநாள் வழிவகுக்கட்டும்



கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்

Q & E Advertising

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## பொங்கல் சிந்தனையில் நம்பிக்கை பொங்கட்டும்!

இன்று தைத்திங்கள் முதல்நாள். தைப்பொங்கல் பெருநாள். உழவர் திருநாள்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்யும் தமிழர் தம் வாழ்வில் முக்கிய நன்னாள். உழைப்பவர் பெருநாள். உன்னத உயர்வு நாள்.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்கள் மதம் கடந்து மாட்சிமையோடு அனுஷ்டிக்கும் மாண்பு மிக்க நன்னாள் இது.

இத்திருநாளில் சூரியனுக்குப் பொங்கல் படைப்பதால் இது சூரியப் பொங்கல் நாள் என்றும் போற்றப்படுகின்றது.

உலக இயக்கத்துக்கு மூல காரணன் சூரியன் - அருணன். அவனின்றி அணுவும் அசையாது. உலக இயக்கக் காரணனான ஆதவனுக்கு நன்றி செலுத்தவும், தங்கள் உயிர் வாழ்வுக்கும், உயர் உழவுக்கும் உற்ற உதவிகளை வழங்கும் ஆவினங்களைப் போற்றவும் தமிழர் தேர்ந்தெடுத்த நன்னாளே இன்று வரும் தைப் பொங்கல் திருநாளாகும்.

ஆதவனின் சக்தி பெரும்பாலும் பச்சைத் தாவரங்கள் மூலமே உலகில் பதிக்கப்படுகின்றது. இந்த விஞ்ஞான தத்துவத்தை அன்றே நன்கு உணர்ந்திருந்தவன் தமிழன்.

உணவுச் சங்கிலியிலேயே அந்தப் பச்சை - பசிய - தாவர உயிர் வர்க்கமே சூரியனுக்கு அடுத்து சக்தியின் மூல வழித்தடம். அந்தத் தாவரங்கள் வாயிலாகவே உலகு சக்தியை ஈட்டிக்கொள்கின்றது.

ஆதவனின் அந்தச் சக்தியை பச்சைத் தாவரங்களின் விளைச்சல் மூலம் பூமிப்பந்து சுவீகரித்துக் கொள்வதால் விளைச்சலுக்குரிய நாளில் அருணனுக்கு நன்றி செலுத்தும் திருநாளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் தமிழர்கள்.

தமது முக்கிய உணவான சோற்றுக்குரிய அரிசி, நெல்வடிவில் விளைச்சலாகக் கிடைக்கும் அந்த நாளையே - காலத்தையே அவ்விளைச்சலுக்குக் காரணனான அருணனுக்கு நன்றி செலுத்தத் தேர்ந்தெடுத்துள்ளனர் தமிழர்.

தமிழரின் ஆண்டுக் கணக்கு திருவள்ளுவர் ஆண்டை ஒட்டியது. வள்ளுவர் ஆண்டு தைத்திங்கள் முதல் நாளில் - தைபொங்கல் தினத்தில் - தொடங்குகின்றது.

அந்தவகையில் இன்று 2036ஆவது வள்ளுவர் ஆண்டு பிறக்கின்றது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை வழிவந்த செயற்பாடுகள்.

வழமையாக புத்தாண்டுடன் - புதுவிளைச்சலுடன் - புத்தரிசிப் பொங்கலோடு புத்துணர்வும், புதுவாழ்வும், புத்தூக்கமும் தரும் எழுச்சியோடு பொங்கிப் பிரவகிக்கும் பொங்கல், இம்முறை மன உளைச்சலோடும் ஆழ்ந்த அமைதியோடும் பிறக்கின்றது.

தைப்பொங்கலில் பானையில் பால் பொங்குவதைப் போல வாழ்வும் பொங்கிப் பூரிக்கும் என மக்கள் காத்திருக்க...

அதற்கு முந்தி ஆழிப் பெண்ணாள் ஆரவாரத்துடன் பொங்கிப் பீறிட்டு, பாய்ந்து வந்து, ஊர்மனைகளைச் சூறையாடி, உள்ளவர்களைக் காவுகொண்டு அனர்த்தம் புரிந்துவிட்டு மௌனமாய் அடங்கி நிற்கிறாள்.

அனர்த்தத்தில் அனைத்தையும் தொலைத்துவிட்ட மக்கள் அடுத்த வேளையை எப்படிக் கழிப்பது என்று அறியாமல் அல்லாடி நிற்கின்றார்கள்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். அவலப்பட்டு நிற்கும் அந்த மக்களுக்கு தைப் பெண்ணாள் நல்வழி காட்ட வேண்டும்.

அதற்கு ஆவன செய்யும் நடவடிக்கைகளை மக்கள் கூட்டு முயற்சியாக எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த அழிவுகளிலிருந்து மக்களை மீட்டு, அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களைப் பெற்றுக்கொடுத்து, உயர்நிலைக்கு அவர்களை உயர்த்துவது இன்றைய முக்கிய கடமையாகின்றது.

இந்தப் பணிக்கு உதவுவதற்குத் தயார் எனத் தெரிவித்து சர்வதேச சமூகம் இரு கைவிரித்து நம்மை வாரி அணைக்கக் காத்து நிற்கின்றது. அந்த உதவிகளைப் பெற்று பாதிப்புற்றோரை தூக்கிவிட நாம் தயாராக உள்ளோமா என்பதே கேள்வியாகும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தைப் பொறுத்தவரை இலங்கைத்தீவில் தென்பகுதியில் ஏற்பட்ட சேதங்களை விட, தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட சேதங்கள் அதிகம். அதிலும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை போன்ற இடங்களில் ஏற்பட்ட சேதங்கள் சொல்லால் வடிக்க முடியாதவை.

சர்வதேச ரீதியில் இலங்கைக்குக் கிடைக்கும் அனர்த்த நிவாரண உதவிகள் பாதிப்புற்ற பகுதிகளுக்குச் சரியாகப் பகிரப்படவேண்டும். நிவாரண மற்றும் மீள் கட்டமைப்பு, புனர்நிர்மாணப் பணிகள் நேர்மையாகவும், ஒளிவு மறைவு இன்றியும், சமச்சீராகவும், ஊழல் - மோசடியின்றியும், துரிதமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதற்கான கட்டமைப்புகளை உருவாக்கிச் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் நாமும் இருக்கின்றோம்.

தைப்பிறப்போடு வழிபிறக்க வேண்டுமானால் இவற்றை செவ்வனே செய்ய நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அப்படிச் செவ்வனே இவை முன்னெடுக்கப்பட்டால், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களை இதேவழியில் பரஸ்பர நம்பிக்கையோடு முன்னெடுக்க வாய்ப்பு ஏற்படும் எனத் திடமாக எண்ணமுடியும்.

இதுவே நமது பொங்கல் சிந்தனையாக இன்று நமது உள்ளத்தில் பொங்கவேண்டும்.

அச்சிந்தனை நம் உள்ளத்தில் பொங்கினால் அனர்த்தத்தால் பாதிப்புற்றோரின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கவும், நல்வாழ்வு பிரகாசித்துப் பிரவகிக்கவும் வாய்ப்புக் கிட்டும்.

# நலன்புரி நிலையங்களில் தொற்றுநோய் பரவும் அபாயம்

### எச்சரிக்கின்றது செயலணிக் குழு

யாழ்ப்பாணம்.ஜன.14

சுனாமி அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் இலையான் பெருக்கம் ஏற்பட்டுள்ளதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்த புனர்வாழ்வு கூட்டுச் செயலணியின் சுகாதார ஒருங்கிணைப்புக்குழுவே இந்த எச்சரிக்கை விடுத்துள்ளது.

அக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலையான்கள் தொற்றுநோய்க் கிருமிக் காவிகளாகும். இதனைக் கட்டுப்படுத்த மருந்துகள் விசிறப்பட்டும் கட்டுப்படுத்துவது சிரமமாக உள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் சுற்றுப்புறச் சுகாதாரம் பேணுவது அவசியமாகும். இது மக்கள் தொற்று நோய்க்கு ஆளாவதைத் தடுக்கும் செயற்பாடாகும்.

இலையான் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் டிப்த்ரெக்ஸ் (Dipthrex), சொல்பக் (Solfac)ஆகிய மருந்துகள் யாழ். மாவட்டத்தில் இல்லாததால் தென்பகுதியிலிருந்தே இதனைப் பெறவேண்டியுள்ளது.

இம்மருந்துகளைப் பெற்றுத் தருவதற்கு அரசசார்பற்ற. தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும் - என்றுள்ளது. (3-202)

# பாவனைக்குதவாத அரிசி நிவாரணத்துக்கு விநியோகம்

### விவசாய சம்மேளனத் தலைவர் முறைப்பாடு

வலி.தெற்கு.ஜன.14

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இம்முறை நிவாரணதிற்கென விநியோகிக்கப்பட்ட அரிசி பாவனைக்குதவாத பழுதடைந்த அரிசியாகக் காணப்படுவதாக புன்னாலைக்கட்டுவன் விவசாய சம்மேளனத் தலைவர் வே.மகாதேவா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்குபிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் அவர் இந்த முறைப்பாட்டைத் தெரிவித்தார்.

நிவாரணத்திற்கென வழங்கப்பட்டுள்ள அரிசி மிகவும் பழுதடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத அரிசியாகக் காணப்படுவதால், அப்பகுதி மக்கள் மிகவும் விசனமடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிவாரணத்துக்கென வழங்கப்படும் அரிசி மற்றும் பொருள்களின் தரத்தை கிராம சேவையாளர்களோ மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளோ பரீட்சித்துப் பார்ப்பதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அதிகாரிகள் இந்த அரிசியைப் பார்வையிட்டு நல்லரக அரிசியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் பிரதேச செயலரைக் கேட்டுக் கொண்டார். (3-152)

# வலுவிழந்தவருக்கு உதவி

வலி.தெற்கு.ஜன.14

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தினால் வலுவிழந்த இருவருக்கு இரண்டு சக்கர நாற்காலி வண்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சமூக நலத்துறை திணைக்களத்தால் வழங்கப்பட்ட இவ்வண்டிகளை பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி வழங்குவார்.

சென்ற வாரம் இடம்பெற்ற நிகழ்வின் போது இப்பிரதேசத்தைச் சேர்ந்த வலுவிழந்த மூவருக்கு சக்கர நாற்காலிகளும் இருவருக்கு மூக்குக்கண்ணாடிகளும் ஒருவருக்கு செவிப்புல உபகரணமும் வழங்கப்பட்டிருந்தன. (3-152)

# கர்ப்பிணிப் பசுவைத் திருடி இறைச்சிக்கு வெட்டினர்

யாழ்ப்பாணம்.ஜன.14

இறைச்சிக்காக கர்ப்பிணிப் பசுவை வெட்டிய திருடர்கள் அதன் வயிற்றுக்குள்ளிருந்த கன்றையும் அவ்விடத்தில் வீசிவிட்டுச் சென்றனர்.

ஈவினைப் பிரதேசத்தில் உள்ள தோட்டக் காணியொன்றில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பசுவைத் திருடிய நபர்கள் அதற்குள்ளிருந்த கன்றையும் பொருட்படுத்தாது அதனை ஈவிரக்கமின்றி வெட்டியுள்ளனர்.

இதேபோன்று கடந்தவாரமும் இப்பகுதியில் உள்ள தோட்டக் காணியொன்றில் கட்டப்பட்டிருந்த மாடொன்று அவ்விடத்திலேயே வைத்து வெட்டப்பட்டுள்ளதுடன் கழிவுகளும் வீசப்பட்டிருந்தன.

இவ்வாறான பல திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக ஈவினைப் பகுதியில் இடம்பெற்று வருவதாகவும் சில தினங்களுக்கு முன்னர் மூன்று ஆடுகள் திருட்டுப் போயுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிக்கின்றனர். (10-69)

### எழுதுமட்டுவாழ் சந்தியில்

# மினிபஸ் - இராணுவ பவுஸர் நேற்றுக்காலை மோதின

### மூவர் காயமடைந்தனர்

எழுதுமட்டுவாழ் சந்தியில் ஏ-9 பாதையில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற மினிபஸ் - இராணுவ தண்ணீர் பவுஸர் விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கிப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த மினி பஸ்ஸும் நாகர்கோயில் வீதியில் இருந்து பிரதான வீதியில் ஏறிய படையினரின் தண்ணீர் பவுஸரும் மோதி விபத்துக்குள்ளாகின. இச்சம்பவத்தில் கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த அன்ரன் - ஜெகந்தன் (வயது 30), பலாலி வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த வெற்றிவேல் ஜெயதர்சன் (வயது 20), சாவகச்சேரியைச் சேர்ந்த இராசரத்தினம் தற்பரன் (வயது 21) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (3-203-117-31-15)

# சுனாமியால் பாதிக்கபட்டோருக்கு செவிப்புலனற்றோரும் உதவி

வலி.வடக்கு,ஜன.14

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை செவிப்புலனற்றோர் சங்கம் பொருள்களைச் சேகரித்து வழங்கியுள்ளது.

இலங்கை செவிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எஸ்.செல்வக்குமார் தலைமையில் சென்ற குழுவினர் கடந்த வாரம் ஒரு தொகுதி பொருள்களை அக்கரைப்பற்றில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் ஒரு தொகுதிப் பொருள்களை மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென தமிழர் புனர்வாழ்வுக் கழத்தினரிடம் கையளித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திற்கு இவர்கள் செல்வதற்கு வேண்டிய வசதிகளை யாழ். மாவட்ட அரசியல்துறையினர் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்றுப்பிரதேசத்திற்குச் சென்ற இக்குழுவினர் வாய்பேச முடியாத செவிப்புலனற்ற இளைஞரான சசிக்குமார் என்பவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்துள்ளனர். (10-86)

# தனது கணவன் கடத்தப்பட்டுள்ளதாக மனைவி ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்.ஜன.14

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வாகனச் சாரதியும் அவருடன் உதவிக்குச் சென்றவரும் வாகனத்துடன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த கந்தையா பகீரதன்(வயது 23) என்ற பிரஸ்தாப சாரதியும், அவருடன் உதவிக்குச்சென்ற அவரது நண்பரான உதயகுமார் என்பவருமே கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பிற்குச் சென்ற 59-9937 இலக்கமுடைய ஹைஏஸ் வாகனம் பயணிகளை இறக்கிவிட்டு கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் என்று சாரதியின் மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட தனது கணவரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பினை ஏற்படுத்திய போது யாரோ சிங்களத்தில் மட்டும் உரையாடுவதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (10-13)

### நாளை

தை 02
15.01.2005
சனிக்கிழமை
திதி பஞ்சமி
காலை 8.29 வரை
நட்சத்திரம் : பூரட்டாதி
நண்பகல் 12.31
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 3.34 - 05.04
ராகுகாலம்: 9.34 - 11.04

# இந்து கலாசார அமைச்சுக்கு 120 பட்டதாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம்.ஜன.14

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி இந்து கலாசார அலுவலர்கள் அமைச்சுக்கு யாழ். குடாநாட்டில் இருந்து 120 பட்டதாரிப் பயிலுநர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுநர்களுக்கு ஆராய்ச்சி அபிவிருத்தி அலுவலர்களாகவும் -

கலாசார அலுவலர்களாகவும் கொழும்பிலும், யாழ்.மாவட்டத்திலும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நியமனம் பெற்ற பெண் பட்டதாரிப் பயிலுநர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு இடமாற்றம் வழங்கியுதவுமாறு கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் க.மகானந்தனைக் கோரிவருகின்றனர். ஆயினும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான மேலதிக வெற்றிடங்கள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்ட கமநல கேந்திர நிலையங்களில் விவசாய ஆராய்ச்சி அலுவலர்கள், பெருபாக அலுவலர்கள் ஆகிய பதவிகளுக்கு பட்டதாரிப் பயிலுநர்கள் நியமனம் செய்யப்படலாம் எனத் தெரிக்கப்படுகிறது. (10-185)

### உதயவாக்கு

தானும் தவம் இரண்டும்
தங்கா வியன்உலகம் வானம்
வழங்கா தெனின்

திருக்குறள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை வடமேற்கில் அமைந்துள்ள வீட்டில் இரண்டு அல்லது மூன்று பெண்கள் தங்கக்கூடிய (ANNEX) பகுதி வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: விளம்பர இல.: 2472, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (40758)

## வாடகைக்குத் தேவை

MEDICAL REPRESENTATIVE ஒருவருக்குச் சகல வசதிகளுடனும் கூடிய (Room) அறை ஒன்று வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு: 0777 301394, 0112 546389. (40765)

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய அழகிய புதிய வீடு உடன் வாடகைக்கு விடப்படும். N.G.O's விரும்பத்தக்கது.

தொடர்பு:
**T.P.: 0777 687821**

(40787) (42)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 06 - 1930 | 26 - 01 - 2004 |



**அமரர் துரைசாமி சின்னராசா (இளையதம்பி)**

திதி: 14.01.2005

அன்புத் தெய்வமே! எம் அப்பாவே!
நீ மறைந்து ஆண்டொன்று ஆனதப்பா! இன்றும்
ஆறவில்லையே எம் துயரம் - என்றும்
உன் நினைவுடனே வாழ்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.**

லிங்க வாசா,
வல்வெட்டி. (40800) (42-16-46-24)

## பெண் ஆங்கில ஆசிரியர் தேவை

அனுபவம் வாய்ந்த பெண் ஆங்கில ஆசிரியர் தேவை.
நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவார்.
தொடர்பு: 021 2222540

(சி-ச0407) (42)

## கருத்தரங்கு

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தினால் குடும்ப வன்முறைகளைத் தீர்த்தல் என்னும் கருப்பொருளில் பெண்களுக்கான முழுநாள் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சில்லாலை இலங்கை மாதா சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சிரேன் மேற்கொண்டு உள்ளார். (3-190)

## கந்தரோடையில் போஷாக்கு உணவு வழங்கும் நிகழ்வு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கந்தரோடைப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கான போஷாக்கு உணவு வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிறு காலை 9 மணிக்கு லயன் செ. மகாதேவனின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 3 வயதுக்குட்பட்ட 25 குழந்தைகளுக்குப் போஷாக்குணவு வழங்கப்படவுள்ளது. (3-203-152)

## சண்டிலிப்பாயில் செயலமர்வு

வலி.தெற்கு,ஜன.14

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தரம் மூன்று ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கில செயலமர்வொன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதே கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் புதுமுகத் தேர்வு தொடர்பான செயலமர்வு ஒன்றும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விரு செயலமர்வுகளிலும் குறிப்பிட்ட ஆசிரியர்களைக் கலந்துகொள்ளவேண்டுமென ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.மாதவகுமார் தெரிவித்தார். (3-152)

## LONDON ENGLISH COLLEGE

No.105, Arasady Road, Jaffna.
T.P.: 222 5889, 0777-252180, 0776-910072.

**WALK IN INTERVIEW**

We are looking for suitable candidates to fill up the following vacancies.

**RECEPTIONIST CUM OFFICE ASSISTANT**
Female, with fair knowledge of English and telephone manners plus experience in file maintenance. Age: 18-35 yrs.

**DTP OPERATOR**
Considerable experience in type setting and designing. Age:18-35 yrs.

**TEACHERS FOR HANDLING 6-12(age) KIDS**
Females Age: 18-35 yrs.

Please walk in on 16th Sunday from 9.30 - 11.30 a.m. Bring the relevant documents to prove your eligibility.

(C/40405)(42-16-46-24) **- Principal.**

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலிகள்



அன்னை மடியில் 11 - 12 - 1974
கடலன்னை மடியில் 15 - 01 - 2004

**பேரானந்தம் உமாசுதன்**
(போட்டோ சுதன்)



அன்னை மடியில் 04 - 03 - 1979 -

**ஸ்ரீபாலகணேசமூர்த்தி சுதாகர்**
(மேனன்)


ஆண்டு ஒன்று ஆனாலும் நண்பர்களே!
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்
நினைவலைகள் நித்தம் வந்தெம்மை நெகிழ்ந்தெடுக்கும்
சுதனின் சுந்தரமுகம் எங்கே?
மேனனின் வதனமுகம் எங்கே?
கள்ளங்கபடமற்ற உங்கள் உள்ளங்கள் மீது
கொள்ளை கொண்டா, கடலன்னை தைத்திருநாளில்
அள்ளி அரவணைத்துக் கொண்டாள்.
கொஞ்சி மகிழ்ந்துண்டு கூடிக் களித்ததெல்லாம்
கொஞ்சமா? எம்நெஞ்சங் குமுறுதையா!
ஆறாத்துயரில் அன்புத்தோழர்களின் கண்ணீர்
நிரந்தரமாகிவிட்டதே என்செய்வோம்!
ஆத்மசாந்திக்கு மாலிசந்தி விநாயகரை வேண்டுகிறோம்.

**உயிர் நண்பர்கள்.**

பிள்ளையார் கோவிலடி.
மாலி சந்தி. (40789)(39-16-46-24)

## நீங்காத நினைவில் ஐந்தாம் ஆண்டு அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 - 09 - 1974 | 14 - 01 - 2000 |



# முதலி பகீரதன்

(பருத்தித்துறை நகராட்சிமன்றம்)

விதிவரைந்த பாதையில் பயணம்
தொடர்ந்ததனால் கதியிழந்த
நாம் கலங்கியே நிற்கின்றோம்.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. **- குடும்பத்தினர்.**

(40740)(42-16-46-24)

# மாபெரும் பரிசுகள்



அழகிய ஆடம்பர BMW கார், 2 - உலக சுற்றுப் பயணங்கள், 4 - ஐரோப்பிய சுற்றுப் பயணங்கள், 6 - ஆஸ்திரேலிய சுற்றுப் பயணங்கள், 9 - மாருதிக்கார்கள், 10 - சிங்கப்பூருக்கான இருவழி விமானச் சீட்டுக்கள், 20 - இந்தியாவுக்கான இருவழி விமானச் சீட்டுக்கள், 165 - குளிர்சாதனப்பெட்டிகள், 138 - கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், 90 - தையல்இயந்திரங் கள், 1200 - மின்விசிறிகள், 1200 - வாயு அடுப்புக்கள், 6900 - கைக்கடிகாரங்கள் மேலும் பல பரிசுகள்

**எல்லோருக்கும்**

சிறிய, பெரிய சேமிப்பாளர்கள் சிறியோர், பெரியவர்கள் அனைவர் மனதையும் அள்ளும் பற்பல பரிசுகள்.

**எல்லா இடங்களிலும்**

கிளை ரீதியிலான பிராந்திய ரீதியிலான மற்றும் நாடளாவிய ரீதியிலான சீட்டிழுப்புகள். நீங்கள் எங்கிருந்தாலும் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்துகின்றன.

## மாபெரும் சீட்டிழுப்பு

- ★ உலக சுற்றுப்பணம் அல்லது பணப்பரிசு - இரு வெற்றிவாய்ப்பு
- ★ மத்திய ஐரோப்பிய சுற்றுப்பயணம் அல்லது பணப்பரிசு - 4 வெற்றி வாய்ப்பு
- ★ ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் அல்லது பணப்பரிசு - 6 வெற்றிவாய்ப்பு
- ★ சிங்கப்பூருக்கான இருவழிப்பயணச் சீட்டுக்கள் அல்லது பணப்பரிசு - 10 வெற்றி வாய்ப்பு
- ★ இந்தியாவுக்கான இரு வழி பயணச்சீட்டுக்கள் அல்லது பணப்பரிசு - 20 வெற்றி வாய்ப்பு.

**பிராந்தியச் சீட்டிழுப்புகள் 09**

09 - மாருதி கார்கள், 02 - 29" கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள்
05 - குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் 10 - தையல் இயந்திரங்கள்.
100 - கைக்கடிகாரங்கள்

**வருடம் முழுவதும்**

வாராந்தம், அரையாண்டு, ஆண்டு இறுதி ப்ரீமியம் மற்றும் விசேட சீட்டிழுப்புக்கள் வருடம் முழுவதும் பரிசுகளை அள்ளி வழங்குகின்றன.

**கிளை ரீதியான சீட்டிழுப்புக்கள்**

ஒவ்வொரு கிளைக்கும் ஒரு குளிர்சாதனப்பெட்டி, ஒரு 21" கலர் தொலைக்காட்சிப் பெட்டி, 10- மின் விசிறிகள், 10 - வாயு அடுப்புக்கள், 50- கைக்கடிகாரங்கள்.

**வாராந்த சீட்டிழுப்புக்கள்**

ஒவ்வொரு வாரமும் ரூ.100,000 பணப்பரிசு மற்றும் ரூ.10,000 இற்கான 10 பணப்பரிசுகள்.

**ப்ரீமியம் சீட்டிழுப்பு**

அழகிய புதிய BMW கார்

மேலதிக விவரங்களுக்கு HNB கிளைகளைத் தொடர்புகொள்ளவும்.

## இனிய தைத்திருநாளில் பத்தும் விமன 2005

அதிர்ஷ்டத்தின் அரவணைப்பில் நீங்களும் இணையுங்கள் தகைமை

- ★ வாராந்த சீட்டிழுப்புகள்
- ★ கிளை ரீதியிலான சீட்டிழுப்புகள்
- ★ பிராந்தியச் சீட்டிழுப்புகள்
- ★ ஆண்டிறுதி மாபெரும் சீட்டிழுப்புகள்

நீங்களும் செய்யவேண்டியது சேமிப்பு அல்லது சிங்கிதி கணக்கில் ரூ 10,000/- ஐ அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ 5000/- ஐ குறைந்தபட்சம் சீட்டிழுப்பிற்கு முந்திய ஒரு மாதம் முழுவதும் பேணி வரவேண்டியது மட்டுமே.

**ப்ரீமியம் சீட்டிழுப்பு**

நீங்கள் செய்யவேண்டியது சேமிப்பு அல்லது சிங்கிதி கணக்கில் ரூ 100,000 /- ஐ அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ 50,000/- ஐ குறைந்தபட்சம் சீட்டிழுப்பிற்கு முந்திய ஒரு மாதம் முழுவதும் பேணிவர வேண்டியது மட்டுமே.

**நுழைவு வைப்புகளும் காலமும்**

தகுதிபெற குறிப்பிட்ட மாதத்தின் முதல் வேலைநாளில் அல்லது அதற்கு முன்னர் வைப்புச் செய்யவேண்டும். அதற்குப் பின்னர் செய்யப்படும் வைப்புகள் அடுத்த மாதத்திலிருந்தே செல்லுபடியாகும்.

**பன்மடங்கு வாய்ப்புகள்**

தகுதிபெறும் கணக்குகள், கணக்கில் உள்ள தொகை (குறைந்தபட்ச மீதியின் ஒவ்வொரு மடங்கிற்கும் ஒரு மேலதிக வாய்ப்பு) மற்றும் காலம் (ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு மேலதிக வாய்ப்பு) என்பவற்றிற்கு ஏற்ப பன்மடங்கு வாய்ப்புகளைப் பெறும்.

**HNB**

யாழ்ப்பாணம்-சுன்னாகம்- நெல்லியடி

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.

(சி-40395) (43-16-46-24)

# துரிதமாக நடக்கிறது துப்புரவுப் பணி மக்கள் வாழ்வில் நம்பிக்கை மலர்வு



கடல் அன்னையின் மடியில் படுத்துறங்கிய மக்களை கடலலை காவு கொண்டு அவர்களின் வாழ்விடங்களை சின்னாபின்ன மாக்கி பதினைந்து நாள்கள் கழிந்து விட்டன.

அப்பிரதேசங்களில் சிதைந்து போயுள்ள கட்டட இடிபாடு களை அகற்றும் பணியில் விடுதலைப் புலிகளின் போராளி



களும் மக்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதுவரை காலமும் போரின் மூலம் மீட்கப்பட்ட பிரதேசங் களின் இடிபாடுகளை அகற்றிய புலிகளுக்கும் மக்களுக்கும் சுனாமியால் அழியுண்ட கட்டட இடிபாடுகளை அகற்றுவது வித்தி யாசமான அனுபவம்தான்.

வடமராட்சிக் கரையோரப் பிரதேச கிராமங்களை சுனாமி தாக்கி சில மணி நேரங்களில் குடாநாட்டு மக்களை ஒன்று திரட்டி உடனடியாகவே மீட்புப்பணிகளை ஆரம்பித்தவர்கள் புலிகள்தான். அன்று ஆரம்பித்த பணி இன்று வரை தீவிரத் துடன் சற்றும் தளராது தொடர்கிறது.

**ஒரு நேரடி ரிப்போர்ட்**

வடமராட்சி கரையோராத்தில் மீட்புப் பணிகளை மேற் கொள்வதற்காக வல்வெட்டித்துறைப் பிரதேசத்துக்கு தீவகக் கோட்ட சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.கண்ணும் பருத்தித்துறை முனைப்பகுதிக்கு மானிப்பாய்க்கோட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் இன்பனும் -

பொலிகண்டி பிரதேசத்துக்கு உடுவில் கோட்டப் பொறுப் பாளர் சு.பா.பவநிதனும் சக்கோட்டைப் பிரதேசத்துக்கு சங்கா னைக் கோட்டப் பொறுப்பாளர் அன்புவும் மற்றும் கடற்புலி களின் தளபதிகளில் ஒருவரான செழியனும் நியமிக்கப்பட்டு அவர்கள் இரவு பகலாக அப்பிரதேசங்களில் நின்று மீட்புப் பணிகளை வழிநடத்தி வருகின்றனர்.

கட்டட இடிபாடுகளை அகற்றுவது என்பது பெரும் சவா லான பணியாகவே தெரிகிறது.

கடலலை தூக்கி வீசிய ட்றோலர் படகுகள் ஒன்றின் மேல ஒன்றாக அடுக்கியதுபோல் கிடக்கின்றன. அவற்றைத் தூக்கு வதற்கு மனித வலுவால் முடியாது. பாரிய பாரம் தூக்கி மூலமே தூக்கி நிமிர்த்த முடியும். ஆனால், இதனைத் தூக்கி அகற்றுவ தற்கு யாழ்.மாவட்டத்தில் பாரம் தூக்கிகள் இல்லை என்று கூறப்படுகின்றது. மிதிவெடிகளை அகற்றும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனமும் கூட தம்மிடமுள்ள பாரம் தூக்கிகளைக் கொண்டு வந்து பயன்படுத்தியபோதும் அதனால் முடியா மல் போய்விட்டது.

இதனையடுத்து பாரிய தொன் எடையுள்ள பொருள்கள் மற்றும் ட்றோலர் படகுகளை அகற் றிச் சீர்செய்வதற்குரிய பாரம்தூக்கி இயந்தி ரத்தைப் பெற்றுத்தருமாறு யாழ்.அரச அதிபர் ஊடாக அரசிடம் வடமராட்சி கடற்றொழில் சங்கங்களின் சமாசம கோரிக்கை விடுத்தது. கோரிக்கை விடுத்துப் பல நாள்களாகியும் இன் னும் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை.

ஒரு பகுதியினர் கட்டட இடிபாடுகளை அகற றும் பணியில் ஈடுபட்டிருக்க.மற்றொரு பகுதியினர் கிணறுகளைச் சுத்தம் செய்தல் போன்ற சுகாதாரப் பணிகளி லும் ஈடுபட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு இருநூறுபேர் வீதம் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.


இதுவரை சுனாமியால் தாக்கப்பட்ட இடங்களில் அரை வாசிப் பகுதியே துப்பரவுப் பணி மூலம் சீர்செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவி கள் வழங்கப்பட்டாலும் அழிந்த பிரதேசங்களைத் துரிதமாக அகற்றுவதற்கு மீட்புப்பணிகளுக்கு இன்னும் ஆள்கள் தேவைப்



படுகின்றனர்.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்க ளுக்கு என்ன என்ன தேவையோ அவற்றை இனங்கண்டு அந்த மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு விடுத



லைப் புலிகளின் மகளிர் அமைப்பினரும் செயற்பட்டு வருகின் றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புள்ளி விவரங்களை அரசு கோரியிருக்கின்றது. எனினும், மதிப்பீடு எதுவுமின்றியே யாழ்.அரச செயலகம் அண்ண

**எஸ்.பிரதீபன்**
(அலுவலகச் செய்தியாளர்)
படங்கள்: **பார்த்தீபன்**

ளவான புள்ளிவிவரத்தையும் அரச திணைக்களங்கள் ஒரு புள்ளி விவரத்தையும் கொடுத்துள்ளன.

உண்மையான சேதவிவரங்களை மதிப்பீடும் பணியில் வடமராட்சி கடற்றொழில் சங்கங்களின் சமாசம் ஈடுபட்டுள்ளது.

இப்பணிகள் பூர்த்தியானதும் அரசுக்கு சுனாமியின் சேத விவரங்கள் அனுப்பப்படும்போது அரசு எதை ஏற்கப்போகிறது என்ற கேள்விதான் தற்போது உள்ளது.

வடக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவை யான உதவிகள் வழங்கப்படுகின்றன என்று ஒருபுறம் பிரசாரம் நடக்கின்றது. ஆனால், அரசினால் எந்தவித உதவியும் கிடைக்க வில்லை என்று வடமராட்சி நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் கூறுகின்றனர்.

தாம் பழையபடி இருப்பிடங்களில் வாழவேண்டும் என்றும் மீண்டும் தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்ற நம்பிக்கை யுடனும் அவர்கள் உள்ளனர்.

எதிர்காலத்தில் சுனாமி போன்ற கடல் அலைத் தாக்கத்தி லிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு பாரிய அணைகளை கடற் கரைப் பிரதேசத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்களில் பலரும் கூறுகின்றனர்.

சுனாமியால் அழிந்து போன பழைய முறை மீன்பிடித் தொழிலை நிறுத்தி தென்னிலங்கை போன்று நவீனத்துவ மீன்பிடித்தொழிலை ஆரம்பிப்பதற்கு அரசு மானிய முறையில் கடன் உதவிகளை வழங்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இது ஒரு புறமிருக்க கடல் அலையோட அள்ளுண்டுபோன கடற்கரையோர காவலரண்களை மீண்டும் அமைக்கும் பணியில் இராணுவத்தினர் துரிதமாக ஈடுபட்டு வருவதையும் காணமுடி கிறது.

---

### கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தால்

## பெரும் எண்ணிக்கையானோரின் தேசிய அடையாள அட்டைகள் இழப்பு!

கொழும்பு,ஜன.14

அண்மையில் இடம்பெற்ற 'சுனாமி' அனர்த் தம் காரணமாக சுமார் ஒரு லட்சத்து 50 ஆயி ரம் பேர் தமது தேசிய அடையாள அட்டையை இழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. தமது தேசிய அடையாள அட்டையை இழந்தோர் அது குறித்து ஆள்பதிவுத் திணைக்களத்துக்குத் தெரி யப்படுத்துமாறு அத்திணைக்களத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய அடையாள அட்டை பெறுவதற்கு அவசியமான ஆவணங்கள் பாதிக்கப்பட்ட மக் களிடம் தற்போது கிடையாததாகையால், திணைக்களத்தினால் பேணப்பட்டுவரும் பதிவு களின் அடிப்படையில் புதிதாக அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தும் வகையில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடமாடும் சேவை ஆரம்பிக்கப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினரால் கொக்குவில் ஞான பண்டிதா வித்தியாலயத்திற்குக் கணனித் தொகுதி ஒன்று இலவசமாக வழங்கப்பட்டது. அந்தக் கணனித் தொகுதியுடன் கழக உறுப்பினர்களும் பாடசாலைச் சமூகத்தினரும் நிற்பதைப் படத்தில் காணலாம். (ஐ-204)

## காணாமற்போனோர் தொடர்பான தகவல் சேகரிப்பு பூர்த்தியாகவில்லை

கொழும்பு,ஜன.14

கடற்கொந்தளிப்புக் காரணமாகக் காணாமற் போனோரது தகவல் திரட்டும் பணி இதுவரை முற்றுப்பெறவில்லையென தேசிய நடவடிக்கைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கும் பொருட்டு நிவாரண பங்கீட்டு முத்திரைகளை வழங்கும் அரசின் திட்டத்தை முன்னர் திட்டமிட்டவாறு இம்மாதம் 15 ஆம் திகதியளவில் ஆரம்பிக்க இயலாதுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரி வித்துள்ளன.

அதுமட்டுமன்றி, கரையோரத்திலிருந்து 300 மீற்றருக்குள் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ குடியிருப்புக்கள் எதனையும் அமைக்க அனு மதிப்பதில்லையென்ற அரசின் தீர்மானம் பாதிக கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த உரிய நிறை வேற்று அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமா கத் தெரிவிக்கப்படவில்லையெனவும் தெரிய வந்துள்ளது.

இதனிடையே - இடம்பெயர்ந்தோர் குறித்த தகவல்கள் தற்போதும் தேசிய நடவடிக்கைச் செயலகத்துக்கு வந்து சேர்ந்தவண்ணம் இருப் பதால், இப்பணியை முடிவுக்குக்கொண்டு வரமுடி யாதிருப்பதாகத் தேசிய நடவடிக்கைச் செயல கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மதுவரித் திணைக்களங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

### ஏப்ரல் மாதத்துக்கு முன்பாக நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.14

இலங்கை முழுவதும் உள்ள மதுவரித் திணைக்களங்களில் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணை யாள்நாயகம் பராக்கிரம எக்க நாயக்க பண்டார அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டம் உட்பட நாடு முழுவதிலும் உள்ள மதுவரித்திணைக்களங்களில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதால் அதன் செயற் பாடுகளைச் சீராக மேற்கொள்ள முடியாது உள்ள தாகத் திணைக்கள அதிகாரிகள் ஆணையாளா நாயகத்திடம் சுட்டிக்காட்டியதை அடுத்தே எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் சகல வெற் றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள மதுவரித்திணைக் களங்களில் 1,592 பேர் பணியாற்ற வேண்டி யுள்ளபோதும் தற்போது 815 பேர் மட்டுமே பணியாற்றி வருகின்றனர்.

பதவி வெற்றிடங்களின் விவரம் வருமாறு:-

மதுவரி ஆணையாயளர் - 01, பிரதி மதுவரி ஆணையாளர் 02, உதவி மதுவரி ஆணையா ளர் - 05, மதுவரி அத்தியட்சகர்கள் - 13, பிரதம மதுவரிப்பரிசோதகர் - 22, மதுவரிப்பரிசோதகர் கள் - 252, மதுவரி சர்ஜன் (மேஜர் தரம்) - 25, மதுவரி சார்ஜன் - 40, மதுவரி காவலர்கள் - 418. (ஐ-5)

## தவறிவிட்டது

சண்முகம் குகபாஸ்கரன் என்பவருடைய மோட்டார் CYCLE முன்பக்க இலக்கத்தகடு N.P. G.S-6436 (வெள்ளை நிறம்) கொக்குவில் - மருதனார்மடம் - K.K.S. வீதியில் மருதனார்மடம் - உடுவில் வீதியில் போகும்பொழுது இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இலங்கைவங்கி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 0602 - 212381. (40785)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில் பண்ணிசை நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை தைப்பொங்கல தினம் காலை 10.30 மணிக்கு பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபை மின்சாரப்பகுதியைச் சேர்ந்த ஊழியர் "பண்ணிசைமணி" சைவத்திரு சி.தில்லைமணி பக்கவாத்திய சகிதம் பண்ணிசை வழங்குவார்.

அறிமுகவுரையை ஞானபண்டித சேவாசுரபி டாக்டர் சி.கதிர வேற்பிள்ளை நிகழ்த்துவார். பின்னர் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 - 02 - 1945



இறப்பு 14 - 01 - 2001

அமரர் சுப்பு தங்கராசா

(கார் உரிமையாளர்)3ஸ்ரீ- 5057

பார்த்து வளர்த்த பூமுகங்கள் ~இன்று
பூத்துக்குலுங்கும் வேளையில்
நீங்களின்றி தவிக்கின்றோம் அப்பா
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு
அகலாது என்றென்றும்.

உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் வீட்டில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பத்திரகாளி கோயிலடி,தாவடி. குடும்பத்தினர்.

(40782)(39-19-16-12)



# SMAK - Natural First Drink

இயற்கைச் சுவை நிறைந்த பழரசம் இப்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனைக்கு உள்ளது.

கீழ்விவரம் தரங்கள்

Mixed friut, Mango, Passion Fruit, Pineapple, Woodapple coffee flavoured Milk-drinks, Chocolate Flavoured Milk drinks.

SMAK orand table water bottles available in convenient sizes.
500ml, 750ml, 1000ml, 1500ml, & 5000ml

Frade inquiries welcome Jaffna Peninsula Agent

யாழ்.மாவட்ட முகவர்
WRIGHT BROTHERS - NALLIAH - T.P.2263694

வலிகாமம் முகவர்:
மல்லிகா மிக்சர் விலாஸ் T.P.021 222 6903
மானிப்பாய்

வடமராட்சி முகவர்:
சாராஸ், நெல்லியடி. சாந்தலிங்கம் (B.A.) T.P.021 - 2264038

யாழ். முகவர்கள்:

1.Roles - Jaffna 2222808
2.மலாயன் -Cafe -Jaffna 2222373
3.Riythan Spot Jaffna 077490661
4.ANGLE Delight - Jaffna 2223447
5.Lingam Cool-Spot Jaffna 2222534
6.M.P.C.S. Canteen Jaffna 2222587
7. சசிரேகா கல்வியங்காடு
8.K.T.M. Ravi. கல்வியங்காடு
9.ஹம்சிகா அச்சுவேலி
10.லிங்கம் உணவகம் – சாவகச்சேரி
11.கஜி கூல்பார் – கொழகாமம்
12.விஜயன் கூல் V.V.T. 2263304
13.மோகன் சபாபதிப்பிள்ளை – ஊரணி
14.Lovely Cool Spot Nelliyady. 2263219
15.சிறி கிருஷ்ணா – நெல்லியடி 2263282
16.நிதர்சன் – Point Pedro
17.வேலவன் – Point Pedro
18.பிள்ளையார் கூல்பார் உடுப்பிட்டி
19.Lingan - Thunalai
20.ராஜா சுவை சோலை பருத்தித்துறை

மங்களகரமான திருமண வைபவங்கள் பூப்புனித நீராட்டு விழா மற்றும் பிறந்தநாள் விழாக்கள் போன்ற விசேட நிகழ்வுகளின்போது விருந்தினர்கள் மனங்குளிரவைப்பதற்கு இயற்கைச் சுவைநிறைந்த தரமான பானங்கள் தொடர்புகளுக்கான விவரம் மேல் தரப்பட்டுள்ளது.

சுவை நிறைந்த பழரசம்!

இன்றே சுவைத்து மகிழுங்கள்! (40687)


## மாதாந்த உதவிப்பணம்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலா பிரிவுகளுக்கான மாதாந்த உதவிப்பணக கொடுப்பனவுகளை எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாகப் பெற்றுக கொள்ளுமாறு ஆணைப பந்தி தபாலதிபர் கேட்டுள்ளார். (ஐ-111)


## நீங்கா நினைவில் தூங்காவுறவுகளின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அவதாரம் 20.09.1974

சிவபதம் 17.01.2002

திதி : சதுர்த்தி

இன்றுடன் மூவாண்டு முடிந்தாலும் உன்
கல்விப்பணி ஒளியைக் காண்கின்றோம்
இலங்கைப்பேராதனைப் பட்டத்தரசனே தமிழ்
சமய ஆங்கில ஆசிரியத்திலகமே!
இந்துநாகரிக விரிவுரையாளனே!
இனிக்குதையாவுன் குரலோசை!!
இன்று வரை தித்திக்குமுன்னிதயவுறவையினி
யெங்கே காண்போம் ஐயா?



செல்வன் தம்பிராசா திகழொளிபவன்
B.A.Dip.in.Ed.

பிரான்பற்று பண்டத்தரிப்பு.

-குடும்பத்தினர்.



IDM
The Nation's ICT Academy

# IDM(PVT)LTD.
## Authorized ICT Education JAFFNA Centre

CIT
Be know and try new things

அனைத்து மக்களுக்கும் எமது இனிய
பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

யாழ். மாணவர்களுக்கு முன் அறிவித்தல் !!!

New Microsoft Office Course available in Jaffna.

Microsoft Recognized Programme

## Diploma In Microsoft Office 2004

Course Contents
- Fundermental for ICT
- MS Word
- MS Excel
- MS Powerpoint
- MS Access
- MS Infopath
- Internet & E-mail
- MS Outlook
- MS Publisher
- Web Designing & hosting
- Basic DTP
- Basic PTP

Duration 3 Months

Course Fee 4500/=
Payable in Installment



| புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன | |
|---|---|
| Batch I | 16/01/05 @ 04.00 PM |
| Batch II | 17/01/05 @ 10.30 am |
| Batch III | 17/01/05 @ 04.30 PM |

451, K.K.S. ROAD, JAFFNA.

TEL: 021 4591398



கணபதி துணை

# திருநெல்வேலி பழங்கிணற்றடி
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருமண மண்டபம்
# திறப்புவிழா சிறப்புமலர் - 14.01.2005







## பழங்கிணற்றடி
## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருமண மண்டபம்
# இன்று திறப்புவிழா

சிவபூமி என்றழைக்கப்படும் ஈழத்திருநாட்டிலே அதன் சிரம்போல் அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலே அறிஞர்களும், ஞானிகளும், யோகிகளும் வாழ்ந்துவந்த திருநெல்வேலிப் பதியில் எழுந்தருளியிருந்து திருவருள் பாலிக்கின்ற பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வடக்கு வீதியிலே ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருமணமண்டபம் புதுப்பொலிவுடன் கம்பீரமாகக் காட்சிதருகின்றது.

சைவமும் தமிழும் செழித்து வளரும் திருநெல்வேலிப் பதியில் சிறப்பானதொரு திருமண மண்டபம் இல்லாமல் இருந்த குறை இம்மண்டப நிர்மாணத்தினால் நிறைவாகின்றது.

இம்மண்டப உருவாக்கத்திற்குத் தோன்றாத் துணையாகவிருந்து திருவருள்பாலித்த எல்லாம்வல்ல ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருப்பாதங்களைத் தினம்தினம் வணங்குவோமாக. இம்மண்டபம் உயர்திரு. நடராசா ஆறுமுகதாஸ் அவர்களால் திறந்துவைக்கப்படுவது மிகவும் பொருத்தமானதே.

இம்மண்டப உருவாக்கத்திற்குப் பல வழிகளிலும் திருநெல்வேலி மக்கள், சிறப்பாக விநாயகரின் பக்தர்கள் அளப்பரிய பணியினை ஆற்றியுள்ளனர். அவர்களை என்றும் நன்றியுடன் நினைவுகூர்வோமாக.

இத்திருமண மண்டப நிர்மாணப் பணிகளைப் பொறுப்பேற்ற கட்டட ஒப்பந்தகாரர் திரு.அப்பையா செல்வரட்ணம் அவர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடனும் அக்கறையுடனும் செயற்பட்டுக் குறித்த காலத்திலே இப்பணியினை நிறைவுசெய்துதந்தார். திரு.செல்வம் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகர் திருவருள்பாலிக்கவேண்டும் என்று இறைஞ்சுவோமாக.

இவ்வாலயத்தின் வளர்ச்சியிலும் இத்திருமண மண்டப நிர்மாணத்திலும் திருநெல்வேலி இளைஞர்கள் பலர் இதயசுத்தியுடன் சிரமதானப் பணிகளிலே ஈடுபட்டுவருகின்றனர். இவர்களின் வாழ்வுசிறக்க எல்லாம்வல்ல ஸ்ரீவீரகத்தி விநாயகர் திருவருள் பாலிப்பாராக.


விழா சிறப்புற வாழ்த்துவோர்:

சூரியா ஹாட்வெயர்ஸ்
திருநெல்வேலி.

கமலேஸ்வரி புடைவையகம்
யாழ்ப்பாணம்.

ஏகாம்பரம் புடைவையகம்
யாழ்ப்பாணம்.

லிங்கம் வர்த்தக நிலையம்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

றஞ்சன் இரும்புத் தொழிலகம்
பொற்பதி வீதி, கொக்குவில்.

தனலக்குமி புத்தகசாலை
திருநெல்வேலி.

இளவரசி பட்டுச்சோலை
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
திருநெல்வேலி.

ஆறுமுகம் சிற்பாலயம்
திருநெல்வேலி.

குமரன் களஞ்சியம், கலைவாணி மில்
திருநெல்வேலி.

மந்தாகினி தொலைத் தொடர்பு சேவை
கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

ஹரிகண்ணன் பிறின்டேர்ஸ்
யாழ்ப்பாணம்.

குரு பிறிண்டேர்ஸ்
திருநெல்வேலி.

தாஸ் ஸ்ரோர்ஸ்
கலாசாலை வீதி, திருநெல்வேலி

ஹரன் புடைவையகம்
திருநெல்வேலி.

ராம்கரன் புத்தகசாலை
திருநெல்வேலி.

கனகா பத்திரிகை விற்பனை நிலையம்
திருநெல்வேலி.

வேல்முருகன் தேநீர்ச்சாலை
திருநெல்வேலி.

ஸ்ரீ கணேஸ் உ.திரிப்பாகம் விற்பனை நிலையம்
திருநெல்வேலி.

சின்னையா இரும்புத் தொழிற்சாலை
திருநெல்வேலி.

பிரகாஸ் போட்டோ கொப்பி, லெமினேற்றிங் & கொமினிகேசன்
திருநெல்வேலி.

சுந்தர்சன் மின்சார விற்பனை நிலையம்
மானிப்பாய்.

சிவகாமி ரேடேர்ஸ்
திருநெல்வேலி.

# ஓராண்டு நினைவலைகள்

மண்ணின் மடியில்
04 - 03 - 1979

கடலின் அடியில்
15 - 01 - 2004



# செல்வன். ஸ்ரீபால கணேசமூர்த்தி

## சுதாகர் (மேனன்)

திதி: – 2-02-2005

ஆண்டொன்று சென்றாலும் மறப்போமா உன் நினைவை
சுதாகரே! உன் மறைவால் எம் நினைவு கெட்டதையா!
கண்ணீர்த் துளிகள் எல்லாம் கருகிப் போனதையா
கதிகலங்கி நிற்கின்றோம் தனியாகத் தவிக்கின்றோம்
எண்ணிக் கலங்குகிறோம் எப்படித்தான் மறந்திடுவோம்
திருமுகத்தைக் காணாது திக்கெல்லாம் தேடுகிறோம்
மண்ணை விட்டு சென்றாலும் எம் மூச்சு
உள்ளவரை உன் நினைவுகள் அழியாது

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு.

தகவல்:- சுதாகர் (பாம்)



# இயற்கையை புறந்தள்ளி விடாதீர் இதனை உணர்த்துவது தைப்பொங்கல்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதிலேயே நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள். எந்த நல்ல காரியத்தையும் தை பிறந்தால் ஆரம்பிக்கின்ற வழக்கம் எம்மவர்க்கு உண்டு. சிறப்பாக சைவமக்கள் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வருகின்ற நல்ல முகூர்த்த நாள்களிலே திருமணம் செய்தல், பிள்ளைகளுக்கு பால் பருக்குதல், காது குத்துதல் போன்ற மங்களமான காரியங்களை நடத்தி வருகின்ற வழக்கத்தை கொண்டவர்கள் நம்மவர்கள். அந்த வகையில் தைமாதப் பிறப்பு வழிபாட்டுக்கும், சூரிய வழிபாட்டுக்கும் மிக மிக முக்கியமானது. சூரிய வழிபாட்டிற்கு முற்றத்திலே பொங்கிப் படைத்து சூரியனை வழிபட்டு நாங்கள் எல்லோரும் வேண்டிய வேண்டியவரங்களை சூரிய பகவானிடம் பெற்றுக் கொள்கிறோம்.

சூரியன் எமது கண்கண்ட தெய்வம். காலை எழுந்தவுடன் சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும். சூரியனை நமஸ்கரித்து அந்த நாளை ஆரம்பிக்க வேண்டும். நல்ல கருமங்களை ஆரம்பிக்க வேண்டும். எதற்கு எடுத்தாலும் சூரியனுடைய கருணை எமக்கு வேண்டியது. மழை வருவது சூரியனால், சூடு வருவது சூரியனால் அதுமாத்திரம் அல்ல ஏனைய எல்லா நலன்களும், பயிர் விளைவதும், நாங்கள் வாழ்வதும் சூரிய பகவானுடைய கருணையினால் என்பதை நாங்கள் மறக்கவும் முடியாது.

சூரிய பகவானுடைய கருணை எமக்கு மிகமிக வேண்டியது. சூரியனுடைய வெளிச்சம் இல்லாமல் நாங்கள் வாழமுடியாது. நாங்கள் அந்த வெளிச்சத்திற்காக எம்பெருமான் சூரியனை வேண்டி நிற்கிறோம். காலையிலே சூரியன் எழுகின்றபோது சூரிய பகவானே என்று சொல்லி வழிபடவேண்டும். இரண்டு மலர்களைக் கொண்டு போய் போட்டு சூரிய பகவானை தினமும் கும்பிடுதல் வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் தினமும் கும்பிடுதல் வேண்டும். மறக்கக் கூடாது ஏனென்றால், நாங்கள் சூரிய பகவானைத்தான் கண்கண்ட தெய்வமாக வழிபட வேண்டும். அது எங்களுக்கு கண்ணுக்குத் தென்படுகின்ற தெய்வம். அதுதான் அந்த தெய்வத்தின் மூலம்தான் நாங்கள் எங்கள் தெய்வங்களை வழிபாடு செய்கின்றோம். முதலிலே சூரியனை வழிபட்டு பின்பு எமது துர்க்கை அம்பாள் அது மாத்திரம் அல்ல நடராஜர் பெருமான் எல்லாவற்றிற்கும் முதலாக விநாயகப் பெருமான், மகாலட்சுமி, முருகப் பெருமான், வைரவப் பெருமான், நாகதம்பிரான் என்று எல்லாம் எங்கள் வழிபாடு இருக்கின்றது. ஆனால், இந்த வழிபாட்டிற்கு எல்லாம் முதலாவதாக சூரிய நமஸ்காரத்தை நாங்கள் செய்ய வேண்டும். திருக்கேதீஸ்வரம் போன்ற பாடல் பெற்ற தலங்களிளெல்லாம் சூரியனுக்கு சிறப்பான கோயில்கள் அமைந்திருக்கின்றன.

**பஞ்சபூத வணக்கம்**

தென்னிந்தியாவிற்குப் போனால் சூரியனுக்குச் சிறந்த கோயில்கள் கட்டப்பட்டிருப்பதை நாங்கள் காணலாம். ஆகவே, சூரிய நமஸ்காரத்திற்குரிய திருநாள் தைப்பொங்கல் தினம். அந்த தைப்பொங்கல் தினத்திலே எல்லோரும் முற்றத்திலே பொங்கிப் படைத்து சூரியனை வழிபடல் வேண்டும். மார்கழி மாதம் முழுவதிலும் பிடித்து வைத்த பிள்ளையாரை அங்கே தண்ணீரிலே கொண்டு போய் சேர்த்து அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். இந்த வழிபாடுகள் எம்மை வாழ வைப்பன. கடல் அனர்த்தத்தினால் பாதிப்புற்றுள்ள மக்கள் இப்பொழுது தான் நம்புகிறார்கள் நாங்கள் கடலை வணங்காது விட்டு விட்டோம் என்று. நீரை வணங்க வேண்டும். அது மாத்திரமல்ல காற்றை வணங்க வேண்டும். நெருப்பை பார்த்து வணங்க வேண்டும். மண்ணை வணங்க வேண்டும். விண்ணை வணங்க வேண்டும். இந்த வணக்கம் பஞ்சபூத வணக்கமாக அமைகின்றது. பஞ்சபூத வணக்கத்தை நாங்கள் புறந்தள்ளி விட்டோம். இப்போது அல்லல்படுகிறோம்.

பஞ்சபூத வணக்கத்தின் மூலம் எங்களுடைய வாழ்வுக்கு வேண்டிய அனைத்தும் கிடைக்கின்றது. இந்த வணக்கத்தை எம்பெருமானை முன்னிட்டு நாங்கள் செய்கின்றபோது எங்களுக்கு எந்த விதமான துன்பங்களும் வராது. சூரிய நமஸ்காரமும், சூரியப் பொங்கலும் மட்டுமல்லாது அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் என்கின்ற பட்டிப் பொங்கலும் செய்தல் வேண்டும்.

அது மிகப்பெரியதொரு தர்மமான பொருள். பசுக்களை, எருதுகளை காப்பது எங்களுடைய சைவதர்மம். அந்த தர்மத்தை நாங்கள் நழுவ விட்டால் அது எங்களுக்கு மிக மோசமாக வந்து அமையும். அந்தத் தர்மத்திற்கு எடுத்துக்காட்டாக இந்த மாட்டுப் பொங்கல் பேசப்படுகிறது. எல்லோரும் இந்த நிகழ்வுகளில் பங்கு கொண்டு எம்பெருமாட்டி ஈசுவரியை வணங்கி விட்டு எல்லாம் வல்ல எம்பெருமானை வணங்கி நாங்கள் செய்ய வேண்டிய தர்மங்களையெல்லாம் உள்ளத்திலே பதித்து அவரவர் தர்மங்களுக்குத் தங்களான கைங்கரியங்களைச் செய்து உய்தியடைய வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் வேண்டுகின்றோம்.

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை.*

## செந்தமிழ் மக்களின் செம்மைசேர் தாயகம்

**இந்த மண் எங்களின் சொந்தமண் என்றிடும்**
**ஈடிலாச் சேதி சொல்ல**
**வந்தநற் சாட்சியாய் ஆனதே வானுயர்**
**வாரியின் பேரலைகள்**
**முந்தியோர் ஊழியில் லெமூரியா மூழ்கிட**
**முகிழ்த்த நம் ஈழநாடே**
**செந்தமிழ் மக்களின் செம்மைசேர் தாயகம்**
**என்பதைச் செப்பு 'தை' யே**

\- சிற்பி.

## நல்லை ஆதீன முதல்வரின் தைப்பொங்கல் செய்தி



இன்று தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாள்.

உலக இயக்க நாயகனான உதயனின் சுடர்ஒளிக் கதிர்களால் வயலில் அதிக நெல்விளைச்சலைப் பெற்ற மகிழ்ச்சியின் பிரதிபலிப்பாக ஆதவனுக்கு நன்றி செலுத்தும் விழா நாளே தைப்பொங்கல் திருநாளாகும்.

தை பிறந்துவிட்டாலே தமிழர்கள்பாடு கொண்டாட்டம்தான். சகல ஜீவராசிகளும் இன்பத்தில் திளைத்து மனோரம்மியமான சூழலில் மகிழ்ச்சியோடு நல்வாழ்வு வாழவேண்டும் என்று நினைத்தே பொங்கல் விழா கொண்டாடப்படுகின்றது. ஆனால்...!

நன்றிப் பெருக்கோடு நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நடைபெறவேண்டிய பொங்கல் இம்முறை சுனாமியின் பேரனர்த்தத்தால் ஒளி குறைந்து சோபையிழந்து காணப்படுகிறது. என் செய்வோம்?

எல்லோர் முகத்திலும் பிரகாசமான வெளிச்சமான ஒளியில்லை. நாடே சோகத்தில் ஆழ்ந்துள்ளபோதும் வழக்கமான பொங்கல் பொங்க வேண்டும் என்ற உணர்ச்சிப் பெருக்கால் அடக்கமான முறையில் பொங்கல் பொங்கப்படுகிறது. ஆடம்பரமற்ற பொங்கல், அமைதியான பொங்கல்.

இன்று பிறந்துள்ள தை மகள் அமைதியையும் சுபீட்சத்தையும் அள்ளித் தரவேண்டுமென்றும் இனியாவது சண்டை சச்சரவின்றி சமாதான சகவாழ்வு கிட்டவேண்டுமென்றும் எல்லாம் வல்ல நல்லைக் கந்தப்பெருமானின் திருவருட்கடாட்சத்தைத் தியானித்து வேண்டி குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
*இரண்டாவது குருமஹாசந்நிதானம்,*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,*
*யாழ்ப்பாணம்.*

# யாழ்ப்பாணத்தின் வாழ்வியலை மிளிரச் செய்த மனிதநேயப் பண்பாடு நிறைந்த குருகுலக்கல்வி

## இப்போது விரல் விட்டு எண்ணக்கூடிய நிலையில்...

*எமக்கு முந்திய சந்ததியினரின் வாழ்வியல்கள் அவற்றுடன் ஒன்றியிருந்த பண்பாட்டு விழுமியங்கள், வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், கல்வி முறைகள், உணவு முறைகள் மற்றும் பல அம்சங்களை மீட்டிப் பார்ப்பதும், புதிய சந்ததியினருக்கு அறிமுகம் செய்வதும் அவசியம்.*

*அந்தப் பணியை, மூத்த எழுத்தாளர் **செல்லப்பா நடராசா** உதயனின் சிறப்பு மலர்களின் ஊடாகக் கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து செய்து வருகிறார்.*

*தைப்பொங்கல் நாளான இன்று அவர் யாழ்ப்பாண மக்களுக்கு மேன்மை பெற்றுத் தந்த குருகுலக் கல்வியைத் தொட்டுக் காட்டி தைப்பொங்கல் சிந்தனையாக முன்வைக்கிறார்.*

*அதிதி எழுத்தாளர்*



பண்டைக்கால யாழ்ப்பாணத்து வாழ்வியல்புகளில் இன்னும் நினைவு கூறப்பட்டு ஏற்றிப்போற்றப்பட வேண்டியது குருகுலக் கல்வி முறையாகும். இக்கல்வி முறையால் பிரசித்திபெற்ற பல மகாவித்துவான்களையும் இலக்கிய இலக்கண வித்தகர்களையும் பெற்றெடுத்த பெருமை யாழ்ப்பாணத்திற்குரியது.

குருபக்தி நிறைந்த வாழ்வியல்புகளை அன்றெல்லாம் குடாநாட்டு மக்கள் கொண்டிருந்தனர். குருகுலக் கல்வி முறையானது யாழ்ப்பாண மக்களைப் புராண, இதிகாசங்களில் சிறந்து விளங்க வழிவகுத்தது. திருக்கோவில்கள் அனைத்திலும் புராணபடலங்கள் நிகழ வழி சமைத்தது. வீடுகள் தோறும் இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், விநாயகர் புராணம் போன்றவற்றைப் படிக்கும் ஒரு நிலையையும் அது தோற்றுவித்தது.

அந்தக் காலத்துக் குருகுலக் கல்வி முறை கற்பித்தல் கற்றலுடன் மாத்திரம் அமைந்துவிட

## இந்தச் சீரிய முறையினை திரும்பிப் பார்க்கக் கூடாதா?

வில்லை. அது குடாநாட்டு மக்களின்பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுப்பதாகவும் அமைந்து வளர்ந்து வியாபித்திருந்தது.

முதுபெரும் தமிழ் அறிஞரான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் காலத்தவர். அவர் நாவலரைத் தமது குருவாகக் கொண்டு வாழ்ந்தவர். அவர் வழி நடந்தவர். தமிழ் மொழியிலும் , புராண, இதிகாசங்களிலும், பன்னிரு திருமுறைகளிலும் நிகண்டு போன்ற இலக்கண நூல்களின் அறிவிலும் மிகமிகச் சிறந்து விளங்கியவர்.

இவர் வண்ணார்பண்ணையில் குருகுலப் பாடசாலை ஒன்றைக் காவிய பாடசாலை என்ற பெயரில் நடத்தி வந்தவராவார். இவரது காவிய பாடசாலையில் கற்று மேம்பாடைந்தவர்களுள் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ.பெரிய தம்பிப்பிள்ளை, வட்டுக்கோட்டை குரு மூர்த்தி ஐயர் ஆகியோரும் அடங்குவர்.

**ஒழுக்க சீலங்கள் வாழ்வியல்**

யாழ்ப்பாணத்து குருகுலக் கல்வி முறையானதுமனித நேயப் பண்பாடுகள நிறைந்த தரும நியாயங்களுடன் கூடிய ஒழுக்க சீலங்கள் மிகுந்த ஒரு வாழ்வியல்பை மக்களுக்குக் கொடுத்துதவிய தென்றால் அது மிகையல்ல.

குருகுலக் கல்வியால் யாழ்ப்பாணம் அடைந்த மேன்மைகளுக்கு உதாரண புருஷர்களாக விளங்கிய சிலரை இவ்விடத்தில் நோக்குவது சாலச் சிறந்ததாகும்.

**வலம்புரிச் சங்குகள்**

குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கர்களான பண்டிதமணியும் புலவர் மணியும் குருகுலக்கல்வி பெற்றெடுத்த இரு வலம்புரிச் சங்குகள் எனலாம். பண்டிதமணி மேதா விலாசத்திற்கு அதி உச்சமான சான்றாக கந்த புராண நட்ஷ காண்டத்திற்குஅவர் எழுதிய உரையைக் கொள்ளலாம். பண்டிதமணியின் பாரம்பரிய ங்களில் வளர்ந்த குருபக்தி பேணுகின்ற ஆசிரியர் பரம்பரை ஒன்று இன்றும் நம்மிடையே உள்ளது.

**பொற்காலம்**

யாழ்ப்பாணத்தில் குருகுலக் கல்வி வாழ்வியலில் பொற்காலமாக நாவலர் காலத்தைக் கொள்ளமுடியும்.

நாவலர் காட்டிய வழியில் அவர் மரபில் வந்து யாழ்ப்பாணத்தை மேன்மை படுத்தியவர்கள் தான் வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பல பிள்ளையும், நாவலரின் தமயனான தம்புவின் மகனான கைலாசபிள்ளையும், சிதம்பரத்தில் உள்ள நாவலர் பாடசாலையில் அதிபராக இருந்தவர் பெரும் அறிஞரான ம.க. வேற்பிள்ளை என்பது வரலாறு.

**இலக்கண வித்தகர்**

குருகுலக் கல்வி முறையில் வித்துவான் கணேசையரின் நல்மாணக்கராக விளங்கி உயர்ந்தவரே அண்மையில் அமரத்துவமடைந்த இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் அவர்கள்.

**தைப்பொங்கல் சிந்தனை**

ஒரே நேரத்தில் நூறு விடயங்களைக் கூட அவதானிக்கக் கூடியவராக விளங்கிய புலோலியூர் நா.கதிரவேற்பிள்ளை அவர்கள் சதாவதானி என வியந்து விதந்து போற்றப்பட்டார். இத்தகைய மேதைகள் எல்லாம் உருவாக யாழ்ப்பாணத்துக் குருகுல கல்வி முறையே வழி சமைத்துக் கொடுத்தது எனலாம்.

**வேறுபாடுகள்**

அன்றைய தமிழ் மேதைகளுக்கும் இன்றைய தமிழ்மேதைகளுக்கும் வேறுபாடுகள் பல உண்டு முன்னையவர்கள் தொண்டுக்காக தமிழைக் கற்றார்கள். பின்னையவர்கள் தொழிலுக்காக அதை நாடினார்கள்.

**குருபக்தி**

குருகுலக் கல்விமுறையானது யாழ்ப்பாணத்தில் மேலோங்கி இருந்த காலத்தில் குருபக்தி எவ்வாறு இருந்தது என்பது நோக்கற்பாலது.

குமாரசுவாமிப் புலவருடைய தலைசிறந்த மாணாக்கராகிய பண்டிதமணி அவர்கள் தமது குருநாதர் நோயுற்ற வேளைமுதல் அவரது இறுதிக் காலம்வரை இரவு பகலாக அவருக்கருகே இருந்து பணிவிடைகள் பல செய்த பெருமையுடையவராக திகழ்ந்தவர்.

புலவர் அவர்கள் மறைந்த பொழுது அவரது பூதவுடலோடு மாயனம் வரை சென்று கண்ணீர் அருவிபோல வழிந்தோட பண்டிதமணி அஞ்சலி செலுத்தினார் என்பது வரலாறு.

(14ஆம் பக்கம் பார்க்க)

# 2ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம்
13
05
1928

மறைவு
14
01
2003



## திருமதி
# பராசக்தி கணபதிப்பிள்ளை



திதி : வைகுந்த ஏகாதசி

பத்துமாதங்கள் எமைச் சுமந்து
பாலாக உதிரத்தை எமக்களித்து
உத்தமமான பிள்ளைகளாய் எமை எல்லாம்
உயர்வோடு வாழவைத்த உத்தமியே!
இப்புவியில் நீங்கள் வாழ்ந்த வாழ்வு
இதுவரையில் போதுமென்று
அத்தனடி சேர்ந்தனையோ அன்னையே?
என்றுமே இறையடியில் உங்கள் ஆன்மா
சாந்தி பெற வேண்டி நிற்கும்...

கண்டி வீதி,
சாவகச்சேரி.

-வீ.எம்.கே. குடும்பம்.

(C/40356)

# துன்ப நிகழ்வுகளின் இடையே நல்லதை எதிர்பார்ப்போம்

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழரிடையே வழங்கும் பழமொழி. இந்தப் பழமொழியில் எல்லை மீறிய நம்பிக்கை உடைய தமிழன் ஒவ்வோர் ஆண்டும் தை பிறக்கின்ற போது தமிழனுக்கு வழி பிறக்கப்போகின்றது என்ற நம்பிக்கையில் உணர்ச்சிவசப்பட்டு, உற்சாகத்துடனும் நல்ல எதிர்பார்ப்புகளுடனும் வாழ்ந்தான்.

ஆனால், தமிழகத்திலும் சரி, தமிழீழத்திலும் சரி ஏன் கடல் கடந்த நாடுகளிலும் சரி உருப்படியாய் எதுவும் ஏற்படாததனால் - ஏமாற்றத்திலேயே தமிழன் மூழ்கியுள்ளான். அத்தோடு, அண்மையில் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பாதிப்பு ஒருபுறம், வரலாறு காண முடியாதளவிற்குக் கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்ட உயிரழிவுகள் மறுபுறம், இதனால் மக்கள் அடைந்த பேரவலம் இன்னொருபுறம். இவ்வாறு பல இன்னல்களுக்கிடையே இத் தை பிறக்கப்போகின்றது. எனினும், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க, இத்துன்ப நிகழ்ச்சிக்கிடையே நல்லதையே எதிர்பார்ப்போம்.

**உலக வரலாறு உணர்த்தும் உண்மை**

உலக வரலாற்றை நாம் உன்னிப்பாகக் கவனிப்போமாயின் எந்த ஒரு நாடும் என்றுமே ஏற்றம் பெற்ற நாடாகவோ அல்லது வீழ்ச்சியுற்ற நாடாகவோ இருந்ததாகச் சான்றில்லை. தனி ஒரு மானிடனில் ஏற்படும் ஏற்ற இறக்கம் நாடுகளுக்கும் பொருந்தும். உலகத்திற்கும் பொதுவாகப் பொருந்தும். உலகப் புகழ் படைத்த வரலாற்று ஆசிரியர் டவுன்பி (Townby) உலக நாடுகளின் வெற்றி, தோல்வியைக் கூர்ந்து ஆராய்ந்த நிலையில் (21 நாகரிகம் படைத்த நாடுகளில் பத்தொன்பது நாடுகளின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் பிற நாட்டுப் படையெடுப்பு - ஆக்கிரமிப்பு அல்ல. மாறாகத் தம்மீது தமக்கு நம்பிக்கையின்மையின் விளைவு) 'Of the 21 civilizations nineteen perished not because of external aggressing but due to the evaporation of belife within என்று கூறியிருப்பது பொருள்பொதிந்த பொன்னுரையாகும்.

எந்த ஒரு நாடும் தன்மீது நம்பிக்கை இழந்த நிலையில் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. ஆகவே, எம் தமிழினம் தலைதூக்க வேண்டின் முதலில் எமக்கு எம்மீது நம்பிக்கை வேண்டும். இதனைத் தான் விவேகானந்த அடிகள் கூட, ஆண்டவன் மீது உனக்கு நம்பிக்கை இல்லாவிடினும், உன்மீது நம்பிக்கை வைத்து வாழ் என்று உனக்கு உன் மீது நம்பிக்கை இல்லையோ அன்றோடு உன் வாழ்வு முடிந்துவிட்டது என்று எச்சரித்துள்ளார். அவரின் நம்பிக்கை வழங்கும் உரையை நாம் எவரும் மறக்கமுடியாது. 'தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்' என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றும் என்றும் பொய்க்கப் போவதில்லை.

**ஏ! தமிழா நம்பிக்கை இழக்காதே**

கி.பி. 10ஆம் நூற்றாண்டிலும் 11ஆம் நூற்றாண்டிலும் இராஜராஜசோழனும், இராஜேந்திர சோழனும் உலகெங்கும் கொடிகட்டி வாழ்ந்த வரலாறு உண்டு. கங்கைகொண்ட வரலாறு, கடாரம் கொண்ட வரலாறு, ஈழத்தைக் கைப்பற்றிய வரலாறு. எல்லாம் இவர்கள் காலத்தில் நடைபெற்றது. சோழன் ஆண்ட வரலாற்றினைத் தமிழனின் பொற்காலம் என்றும் வரலாறு வர்ணிக்கிறது. The Golden era of the Cholas என்று பெரும்புகழ்படைத்த வரலாற்று ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரி சாற்றும் கருத்தினை இங்கு நினைவு கொள்வோமாக! இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் மிகப் பெருமையுடைய கோயில். உலகின் கவனத்தை ஈர்த்துள்ள கோயில். பெருவுடையார் கோயிலைப் பற்றிப் பன்மொழிப் புலவர் தே.பொ.மீ. கூறுகையில்:-

*'கோயில் பெரிது, கோபுரம் பெரிது, சிவலிங்கம் பெரிது,*

*நந்திபெரிது, அனைத்தும் பெரிது, மன்னன் உள்ளமும் பெரிது'* என்று கூறியுள்ள கூற்றும் எமக்கு இனிப்பூட்டும் செய்தியாகும். இராஜராஜ சோழனின் மைந்தன் இராஜேந்திர சோழன் அடுத்துப் பெருமை பெற்றிருப்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. அவன் எழுப்பியுள்ள கங்கைகொண்ட சோழபுரம் கோயில் அவன் கங்கைகொண்ட வரலாற்றினையும் கோயிலின் திராவிட சிற்பத்திறத்தினையும் திறம்பட எடுத்துரைக்கிறது. அத்தோடு, இராஜேந்திர சோழன் ஈழத்தைக் கைப்பற்றியபோது இன்றைய பொலன்னறுவைக்கு 'புலஸ்திய நகர்' என்று பெயரிட்டு எழுப்பியுள்ள சிவன்கோயில் ஈழத்தை அவன் கைப்பற்றிய வரலாற்றினை எடுத்துரைப்பதோடு அவன் சிவ பக்தனாக விளங்கினான் என்ற செய்தியையும் செப்புகிறது. இவை அனைத்திற்கும் மேலாகச் சோழர்கள் இமயத்தில் புலிக்கொடி பொறித்த புகழ்பெற்ற வரலாற்றையும் நாம் மறப்பதற்கில்லை. மாறாக என்றும் இறுமாப்புடன் பேசத்தக்க இனிய செய்தியாக இது விளங்குகின்றது.




இப்பெருமை மிக்க சோழரின் வரலாறு முடிவுற்று ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகள் கடந்துள்ளது. வீழ்ந்த தமிழினம் ஆயிரம் ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் தலைதூக்குவது இயற்கையோடு ஒட்டிய நிகழ்ச்சி ஆகும். விழவிழ எழுபவன் தமிழன் என்பதற்கமைய வீழ்ந்துள்ள தமிழன் மீண்டும் எழுச்சி பெறுவது உறுதி. எனவே, ஏமாற்றங்கள் பல கண்ட நிலையிலும் நாம் சோர்வடையாது உள்ளத் தூய்மையோடு, துடிப்போடு - தெளிவோடு செயலாற்றின் நாளை நமதே, வெற்றி நமதே என்ற நிலை உருவாவதை உலகின் எந்த சக்தியும் தடுக்கமுடியாது.

**தையின் தோற்றமும் அதன் வரலாறும்**

விழா எடுத்து வீழ்ந்தவன் தமிழன் என்று கூறும் அளவிற்குத் தமிழன் எடுக்காத விழாக்கள் இல்லை. தமிழன் பல விழாக்களை எடுத்துள்ளான் என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தரின் பின்வரும் பாடல் சான்று பகர்கின்றது.

*'ஐப்பசி ஓண விழா*
*கார்த்திகை விளக்கீடு*
*மார்கழி ஆதிரை நாள்*
*நெய்ப்பூசம் ஒண்புழுக்கல்*
*நேரிழையார் கொண்டாடும்*
*தைப்பூசம்*
*மாசிக்கடலாட்டு*
*பங்குனி உத்தரம்*
*பதிணெண் கணங்கள் தம்*
*'அட்டமி நாள்'* - என்று ஞானசம்பந்தர் குறிப்பிடும் இவ்விழாக்கள் எதுவும் தமிழனின் முழுத் தனித்துவத்தைக் காட்டுவதாக அமையவில்லை. சிலவற்றில் தமிழ்ச் சாயல் உண்டு. ஆனால், பலவற்றில் வடநாட்டின் வல்லாண்மைக்கு நாம் ஆளாகி இருப்பதையே இவ்விழாக்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், இவற்றிக்கு முற்றிலும் மாறுபட்டு விளங்குவது தான் தைப்பொங்கல் திருநாள். 'தைப்பொங்கல் தைத்திருநாள்' என்ற சொற்றொடர் தனித்தமிழ் சொல்லாட்சியையும் தமிழன் அடையாளத்தையும் காட்டி நிற்கின்றது.

**தைப்பொங்கல் வேறு மகரசங்கராந்தி வேறு**

இங்கும் தமிழன் தனித்துவத்தைச் சிதைக்கும் முறையில் 'மகரசங்கராந்தி' என்ற வடமொழிச் சொல்லாட்சி எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் இயம்பின் வடநாட்டின் பண்பாட்டுப் படையெடுப்புக்குச் சான்றாய் மகரசங்கராந்தி என்ற சொல்லை வலிந்து வழக்கத்திற் கொண்டுவரப் பெருமுயற்சிகள் எடுககப்படுகின்றன. பண்பாட்டுப் படையெடுப்பு காலப்போக்கில் அரசியல் படையெடுப்புக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் உணர்ந்து என்றும் விழிப்போடு இருத்தல் வேண்டும்

**போகிப் பண்டிகை**

தைப்பொங்கல் விழா சிறப்பாக அமையப் பொங்கலுக்கு முதல் நாள் நாம் வதியும் வதிவிடமும் சுற்றாடலும் தூய்மையாக்கப்படுகின்றது. இது போகிப் பண்டிகை என்று குறிப்பிடப்படுகின்றது. எம்மைச் சூழ்ந்துள்ள அழுக்குகள் அனைத்தும் போக்கப்படுவதனால் போகிப் பண்டிகை என்று பெயர் பெற்றதுபோலும். 'மாதங்களில் நான் மார்கழி' என்று கண்ணன் பகவத்கீதையில் பகர்ந்திருந்தாலும் பீடை, நோய் பீடித்த மாதம் மார்கழி என்று தமிழர்கள் கருதுவதனால் மார்கழியைப் போக்கி தையை வரவேற்கும் நிகழ்ச்சியாக இது அமைகின்றது.

**உழவின் உயர்வு**

உழவின் உயர்வை உணர்த்தும் நாள் தைத்திருநாள். 'பாடுபடுவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா' என்ற கவிமணியின் கூற்றினை ஏற்று உலகின் அச்சாணியாக விளங்கும் உழவுத்தொழிலின் உயர்வை உவந்து போற்றும் விழாவாகவும் இப்பொங்கல் விழா

மா.க.ஈழவேந்தன்
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்

அமைகின்றது. உழவுத் தொழில் உயர்ந்து விளங்க உறுதுணையாக விளங்குவது ஞாயிறின் தோற்றமாகும். எனவே, 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்' என்று கதிரொளி வீசும் கதிரவனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. 'இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று' இறையருள் தன் இதயத்தில் ஏற்பட்டுள்ளது என்று மணிமொழியாளர் - மாணிக்கவாசகர் மொழிந்துள்ள திருவாசகச் சொற்றொடரும் எம்மை ஆட்கொள்ளத்தான் செய்கின்றது.

**நன்றியுணர்வை நவிலும் மாட்டுப் பொங்கல்**

'பொங்கலோ பொங்கல்' என்று தைப்பொங்கலை எம் நெஞ்சம் நிறைவோடு கொண்டாடிய நிலையில் அடுத்த நாள் நிகழ்ச்சி மாட்டுப் பொங்கலாக - பட்டிப்பொங்கலாக மலர்ந்துள்ளது. செங்கதிர்ச் செல்வனுக்கு நன்றி நவின்ற தமிழன் தன் உற்றார், உறவினர்களுடன்கூடி மகிழ்ந்த தமிழன் தன் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கிய ஏற்றம் தந்த எருதனையும் நனி சுவைமிக்க பால் தந்த பசுவினையும், ஆவினையும் மறக்காத நன்றியுணர்வுள்ள விழாவாக மாட்டுப் பொங்கல் அமைகின்றது. 'உண்ணீர்! உண்ணீர்!' என்று தனக்குத் துணை நின்ற ஏற்றம் தந்த எருதுக்கும் பசும்பால் தந்த பசுவிற்கும் தமிழன் உணவூட்டும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தமிழனின் நன்றியுணர்வு மானிட சமுதாயத்தை மட்டும் தழுவி நில்லாது விலங்கு உலகையும் வியந்து போற்றுகின்ற உயர் உள்ளத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது. எனவே, இவ்வாண்டுப் பொங்கலை வரவேற்கும் நாம் 'மன்னிய சுவை என இனிக்கும் எம் வண்டமிழ் பரவையாண்டும்' என்று வாழ்த்துவோமாக. ✳

## பொங்கிய அலையால் பொங்கல் பொங்கிடும் நிலையே போச்சு!



பொங்கிய கடலின் அலையால்
போனது உலக வாழ்வு
எங்குமே மரண ஓலம்
ஏக்கமே முடிவு பொங்கல்
பொங்கிடும் நிலையில் நாமா
பொழுதெலாம் இருளாய் ஆச்சு
எங்களின் வாழ்வு இனிமேல்
இருண்டதோர் உலகம் தானே

தையுமே பிறக்கு மென்று
தையிரியத் தோடி ருந்தோம்
தையது பிறக்கு முன்பே
சாவுகள் வந்த தையோ
மெய்யுமே பொய்யாய் போச்சு
வேடிக்கை வாழ்வு ஆச்சு
வையக வாழ்வும் பொய்தான்
வாழ்வது மாயம் தானோ

அறிகுறி ஏதும் இன்றி
அறியா யமாக அலையும்
வெறியது கொண்டு உயிரை
விரைந்துமே குடித்த தையோ
சிறிதுமே இரக்க மில்லா
செயலிதை இறைவா நீயும்
அறிந்துமே தடுத்தா யில்லை
அறியா யமாச்சு வாழ்வு

கதியினி ஏது எமக்கு
கடவுளே கையை விட்டால்
விதியிது என்று சொல்லி
வேடிக்கை யாச்சு வாழ்வு
மதியினால் வெல்ல எமக்கோர்
மார்க்கமே இல்லைத் தானோ
எதையுமே ஆட்டி வைக்கும்
இறைவனின் ஆட்டம் தானோ?!

- கவிஞர் வ.யோகானந்தசிவம்.



## புதுவாழ்வு மக்கள் பெறவேண்டும்

மலர்ந்து விட்ட புத்தாண்டில்
மணக்க வரும் தைமகளே!
புலர்ந்து வரும் பொழுதெலாமினி
புதுவாழ்வு மக்கள் பெறவேண்டும்!

நிறை குடமாய் வாழ்ந்துவிட்ட புத்தாண்டில்
நிம்மதியும் அமைதியம் நிலைக்கட்டுமே!
பிறையாய் இருக்கும் உயர்வெலாம்
பெருமதியாய் ஒளியில் மின்னட்டுமே!

இனியேனும் தூய்மையை இதயத்தில்
இருக்க விட்டு மகிழுங்கள்!
தனியொரு மனிதனும் தவிக்காமல்
தரணியில் வாழவிட்டுப் புகழுங்கள்!

கவிஞர் செ.பரமநாதன்

## சோதியுறப் பொங்கித் தொழு!

மாரி வளஞ்சிறக்க மக்கள் மனமகிழ
காரியங்கள் யாவையுங் கைகூட - சூரியற்கு
பொங்கலுடன் பூசை புரிந்தெம் மினமுய்ய
மங்கலமாய் வேண்டு மகிழ்ந்து

செந்தமிழர் வாழிடங்கள் செல்வஞ் செழித்துயர
நொந்தவர்கள் துன்பம் நொடித்தோட - விந்தையுற
ஆதித்தன் செங்கரத்தா லாரா தனைத்தழுவ
சோதியுறப் பொங்கித் தொழு.

முதுபெரும் புலவர்
வை.க.சிற்றம்பலம்.

## இயற்கையதன் முழமுதலே! இம்முறை நீயே பொங்கலிடு!

நீலக்கடலும் நீள்வான் கரையும்
நிலவின் ஒளியும் நெல்மணியும்
காலைக்கதிரும் காற்றின் கனிவும்
கலையா கவின்சேர் திருநாட்டின்
சீலம்சிதற சிறுமை செழிக்க
செய்த போரின் சினம்வாடும்
காலம்கனியும் தருணம் ஏனோ
கடலும் பொங்கிப் படைத்ததைய்யா?!

கடலில்கரையாய் கரையே கடலாய்
கண்டனர்; ஏதும் மீதமில்லை
உடலைத் தனியே தூக்கிடும் போதும்
உற்றவர் என்றே யாருமில்லை
திடமாய்கரையில் தமிழர் மீண்டும்
தெம்புட னெழுந்து திரிவதெனில்
இடரைத் தீய்த்து அவரின் மனதில்
அன்னை யருளப் பொங்கலிடு.

- அனலையூர் சேந்தன்.

## மீட்சிபெறப் பொங்கிடுவோம்

பொங்கிப் படைத் தலக்குப்
பொருளீயும் உழு தொழிலால்
தங்கு மெழில் கொழிக்க
தரணியிலே பொங் கிடுவோம்!

ஆழக் கட லலையின்
அகோர வெறி யாட்டம்
மீளநிக ழாம (இ)லினம்
மீட்சிபெறப் பொங் கிடுவோம்!

உற்றா குற வுடனே
உறையு(ள்) ளுடை யழிந்து
நிற்போரின் நிலை யுயர்த்த
நீதிபெறப் பொங் கிடுவோம்!

- வி.சி.குஞ்சிதபாதம் -

## யாழ்ப்பாணத்தின்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதமணி அவர்கள் இவ்வுலகை நீத்த போது அவரை 37ஆண்டுகள் ஒருதினம் தன்னும் தவறாது நிழல் போல தொடர்ந்து பணி விடைகள் பல செய்தவரான ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் வெளிப்படுத்திய சோகமும் கண்ணீரும் பண்டிதமணி தனது குருநாதருக்கு வெளிப்படுத்திய சோகத்தை ஒத்ததாகவே அமைந்தது. ஆசிரியமணியும் பண்டிதமணியின் பூதவுடலுடன் மயானம் வரை சென்று கண்ணீர் உகுத்தினார் என்பதும் வரலாற்று நிகழ்வில் பதியப்பட்ட ஒன்றாகும். இவ்வித குருபக்தியானது யாழ்ப்பாணத்தின் நீண்டவரலாற்றில் வியாபித்து அன்று இரண்டறக்கலந்திருந்தது.

இந்த மரபை வாழ்வியல்பை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் போன்ற இரண்டொருவர் வெளிப்படுத்துபவர்களாக இன்னும் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பது சற்று அறுதல் தரும் விடயமாகும்.

### குருகுல முறையில் ஆகமக் கல்வி

அந்தணர் சமூகத்தவர்களது ஆகமக் கல்வியானது அன்றும் இன்றும் குருகுலக் கல்வி முறையிலேயே அமைந்துள்ளதைக் காண்லாம் அந்தக் காலத்தில் வடலியடைப்பைச் சேர்ந்த அருணாசல சாஸ்திரிகள் குருகுலக் கல்வி முறையில் அந்தணர்சிறார்களுக்கு அவர்களுக்குரியதான ஆகமக் கல்வியைப் போதித்துள்ளார் என அறிய முடிகிறது. இன்று இணுவிலில் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் அவர்கள் குருகுலக் கல்வி மூலம் தமது சமூகத்தைக் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஆகமக் கல்வியைச் சிறந்த முறையில் அளித்து வருகிறார். இவரது மாணவர்கள் பலர் அவர்களது துறையில் விற்பன்னர்களாக இருப்பது கண்கூடு. குருபக்தியை இவர்களிடத்தும் என்றும் காணலாம். சைவக் குருமார்களுடைய குரு சீடர் பாரம்பரியத்தையும் இவ்விடத்தில் விசேடமாகக் குறிப்பிட்டாக வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நாதஸ்வர தவில் வாத்தியங்களும் குருகுலக் கல்வி முறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கும் குருபக்தியைத் காணமுடியும். நாதஸ்வரத்தையும் தமது குருநாதரையும் முதலில் வணங்கிவிட்டே பல வித்துவான்கள் கச்சேரியை ஆரம்பிப்பதை நான் பல இடங்களில் அவதானித்ததுண்டு. இவர்களது குருகுலக் கல்வி முறையானது அவரவர் துறைகளைச் சார்ந்துமட்டும் அமைந்து விடுகின்றது.

குடாநாட்டு மக்கள் அன்று பேணிய குரு குலக் கல்வி முறை காரணமாகப் பலர் தமிழகப் பெரியோர்களினாலேயே மேதைகள் எனப் போற்றப் படுபவர்களாக விளங்கியுள்ளனர்.

இதன் காரணமாக திருவாவடுதுறை ஆதீனவித்துவான்களாகவும் பலர் பதவி வகித்துள்ளனர். இவர் களுள் மகாவித்துவான் சபாபதி நாவலர் குறிப்பிடத்தக்கவர். இவர் வடகோவையைச் சேர்ந்தவர்.

### சமூகக் கடமைக்கு உட்பட்ட முறை

இன்றைய கல்விமுறை அன்றைய கல்வி முறையிலிருந்து வேறுபட்டது. எனினும் குருபக்தி எனப்படுகின்ற வாழ்வியல் அனைவரானும் பேணப்பட வேண்டிய சமூகக் கடமைகளுக்குட்பட்டதாகும் பொறுமை, அடக்கம், இரக்கம், கீழ்ப்படிவு, அதைமதித்தல், பெரியாரைக் கனம் பண்ணுதல், அவர் களுக்கு என்றும் மரியாதைசெய்தல், முதியோரைப் பேணுதல், மாதர்களுக்கு மதிப்பளித்தல், பசுவை வணங்குதல் எல்லாம் குருபக்தி உள்ள ஒருவரிடம் மிகுந்திருப்பவை. திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் எனும் சைவப் பெரியார் அந்நியர் ஆட்சியின்போது வெள்ளைக்காரப் பறங்கித் தானமாகப் பசுவைக் கொடுக்கவேண்டிய தனது முறை வந்தபோது அந்தப் பழிபாவத்திற்கு அஞ்சி இரவோடிரவாகத் தமிழ் நாட்டிற்குத் தப்பிச்சென்றவர் என்பது வரலாறுஅன்றைய குடாநாட்டு வாழ்வியல்புகள் எவ்விதம் அமைந்திருந்தன என்பதற்குப் போதுமானதாகும்.

இத்தைப்பொங்கல் திருநாளில் சைவத் தமிழ் மக்களாகிய நாம், குறிப்பாக இளைய தலைமுறையினர், எமது முன்னோர்கள் தடம் பதித்த சீரிய பாதையை ஒருகணம் திரும்பிப் பார்க்கவேண்டும். அவ்வாறு செய்யின் பல நூறு நன்மைகள் விளையும் என்பது திண்ணம். இளையோருக்கு மட்டுமன்றி சமூகப் பொறுப்புணர்வு உள்ளவர்களுக்கும் இது சிந்தனைக்காக...

☆

## புதிய செயலாளர்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.மாநகர சபையின் செயலாளராக திருமதி மதுமதி வசந்தகுமார் நியமிக்கப் பட்டுள்ளார்.

முன்னாள் செயலாளர் வே.குலநாயகம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(10-13)

## விசேட பொங்கல்

குடத்தனை,ஜன.14

பொங்கல் தினமான இன்று வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் உள்ள மகா மண்டபத்தில் காலை 9 மணிக்கு விசேட பொங்கல் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பொங்கல் விசேட பூசையும் நடைபெறும்.

(10-78)

## வாராந்த நிகழ்வு

குடத்தனை,ஜன.14

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை 'மாணிட்பிறவி' என்னும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் ம.பகீதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(10-78)

## போசாக்குணவு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.14

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வடமராட்சிப் பகுதியில் உள்ள நலன்புரி முகாம்களில தங்கியுள்ள சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய் மார்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறையினர் போசாக்குணவுகளை வழங்கி வருகின்றனர்.

(10-202)


வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்கான
விசேட சலுகை
5/= மட்டுமே
மேலும்
தொடர்ச்சியான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கான எமது அங்கத்துவ அட்டையினைப் பெற்றுக்கொள்ளுங்கள். (இலவசம்)
திருமுருகன் கொம் நெற்
இந்தியா 20.00
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310



Direct Start
O/L மாணவர்களுக்கான புதிய கணினி பிரிவுகள் ஜனவரி மாதம் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகும்.
கல்வி ஆண்டு 2005
Diploma in MS Office (MSO)
Diploma in Computer Studies (DICS)
Diploma in Computer Programming (DCP)
Diploma in Desktop Publishing (DTP)
Diploma in Web Design (DWD)
Diploma in Computerised Accounting (DCA)
அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்






தற்பொழுது சாவகச்சேரியிலும் ASIAN COMPUTERS

- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவணை முறையிலும் லெுத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

ASIAN COMPUTER SYSTEMS

| | | | | |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. ✆ 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி. ✆ 077-3039587 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |


## 16 ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில் 03 – 06 – 1951



விண்ணில் 31 – 12 – 2004

### அமரர் சிங்கவேலு இரகுநாதன்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரராகிவிட்ட உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் 16ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண நிகழ்வும் நாளை (15. 01. 2005)சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணக் கிரியைகளில் கலந்துகொண்ட சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

238,கோயில் வீதி,
நல்லூர்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(C/40360)(42-16-19)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 – 08 – 1936



விண்ணில் 29 – 01 – 2001

### அமரர் வல்லிபுரம் பூபாலு (மேசன்)

திதி:14.01.2005 பஞ்சமி

மதிகொண்டு வாழ்ந்திடினும் விதிதனை வென்றிடுமா? வையத்துள் வாழ்விங்கு நிலை பெறுமா? நீங்கள் மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் எங்கள் நெஞ்சை விட்டு உங்கள் நினைவு அழியவே அழியாது!

குஞ்சர்வளவு,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

பிரிவால் வருந்தும்:
குடும்பத்தினர்.

(40724)(42-16-19)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இலட்சுமி அம்மா கனகசபாபதி

திதி:14.01.2005

ஆண்டுகள் மூன்று கடந்தாலும் உங்கள்
பசுமையான நினைவலைகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு என்றென்றும் நீங்காது!

உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காக
என்றும் பிரார்த்திக்கும்:
மகன், மகள்,
பெறாமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

(C/40234)(42-16-19)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 – 01 – 1931



விண்ணில் 26 – 01 – 2004

### அமரர் வைத்தி கந்தையா

திதி:14.01.2005

அன்பின் இருப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
சமூகத்தின் அறிவொளியாய்
பண்பின் சிகரமாய்
பல்லோரும் போற்ற வாழ்ந்தீரே!
உங்கள் ஆத்ம சாந்திக்கு..!

கூழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(40751)(42-16-19)

# உதவும் நாடுகள் வழங்கும் ஒவ்வொரு டொலருக்கும் அதனைப் பெறும் நாடுகள் கணக்குக்காட்ட வேண்டும்

## இறுக்கிப்பிடிக்கச் சர்வதேச சமூகம் கிடுக்குப்பிடி

கொழும்பு.ஜன.14

இலங்கை உட்பட சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் நிவாரணப் பொருள்களின் விநியோகம் தொடர்பாக சர்வதேச கணக்காய்வு நிறுவனம் ஒன்று கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அமெரிக்காவில் கணக்காய்வுத்துறையில் பிரபல்யம் பெற்ற பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் (Price Waper House Poopers) என்ற நிறுவனத்திடமே இப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் நிவாரணப் பணிகளுக்குச் சுமார் எண்பதாயிரம் கோடி ரூபா நிதி உதவிகளை வழங்குவதற்கு உதவும் நாடுகள் முன்வந்துள்ளன.

இது சர்வதேச மற்றும் தனிப்பட்ட முகவர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட உதவிகளுக்கு மேலதிகமாக வழங்கப்படவிருக்கிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் முதற்கட்ட உதவிகளே முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றன. அதில் அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்றெல்லாம் பரவலாகப் புகார்கள் கிளம்பத் தொடங்கியுள்ளன.

ஆனால், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளும், பாதிக்கப்படவர்களுக்கே சென்றடையவேண்டும் என்பதில் ஐக்கிய நாடுகள் நிறுவனம் உறுதியாகவே இருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையிலேயே கண்காணிப்புப் பொறுப்புகள் பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் மனிதாபிமான உதவிகள் இணைப்பு முகவர் அமைப்பின் பேச்சாளரான எலிஸபெத் பையஸ் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான உதவிகளை வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜெனீவாவில் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வழங்கப்படும் நிதி மற்றும் உதவிகள் அனைத்தும் மீள்கட்டமைப்புக்கென முன்னுரிமை வழங்கப்படவேண்டிய திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்காகச் செலவிடப்படவேண்டும் அச்செலவுகளுக்கு வெளிப்படையான வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் இந்த அமைப்புக் கேட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டை சர்வதேச, தனியார், அரசசார்பற்ற நிறுவனங்களும், உதவி வழங்கும் நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

வெளிப்படையான ஒரு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மீள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் போதும் ஊழல்களையும், மோசடிகளையும் இலகுவாக ஒழிக்க முடியும்.

இப்புதிய ஏற்பாட்டின்படி சுனாமி அனர்த்த நிதியாக வழங்கப்படும் உதவிகளின் ஒவ்வொரு டொலருக்கும் அவற்றைப்பெறும் நாடுகள் கணக்குக்காட்ட வேண்டும். அவை முறையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை இக்கணக்காய்வு நிறுவனம் கண்காணிக்கும்.

இவற்றிக்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகள் நிறுவனமும், தனது சொந்தக் கணக்காய்வு நிறுவனத்தின் மூலமும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என எலிஸபெத் பையஸ் தெரிவித்துள்ளார். (க-10)

## 28 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் இழப்பு

மாதகல்,ஜன.14

சுனாமி பேரனர்த்தத்தால் மாதகல் லூர்து மேரி கடற்றொழில் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத்தின் மீனவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

படகுகள், இயந்திரங்கள், வலைகள் உட்பட 28 லட்சம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களை அம் மீனவர்கள் இழந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் எ.மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் ஏற்பட்ட நாள் முதல் மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதால் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளதாக அம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (10-202-95)



'எக்கோ' (ECHO) நிறுவனத்தின் அனுசரணையுடன் கீயூடெக் நிறுவனத்தால் தம்பாட்டி மீனவர்களுக்கு 20ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மீனவர் ஒருவருக்கு உபகரணங்களைக் கையளிப்பதனைப் படத்தில் காணலாம். (8-190)

# சேதமான உடைமைகளைப் பயன்படுத்தி காவலரண்களை அமைக்கும் படையினர்

## யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் உடைமைகளைப் பயன்படுத்தி காவலரண்களை அமைக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக வடமராட்சிப் பகுதி மக்கள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த இயற்கை அனர்த்தத்தினால் வடமராட்சிப் பகுதியில் கடற்கரையோரத்தில் இருந்த படையினரின் காவலரண்களும் முற்றாகச் சேதமடைந்தன. இவற்றை மீளமைக்கும் பணியில் தற்போது படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கென அனர்த்தத்தினால் சேதமடைந்த பொதுமக்களின் உடைமைகளையும், இடிந்து போயுள்ள கட்டடத் தொகுதிகள், கூரைகள் என்பவற்றை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, படையினரின் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை - படையினரின் இச்செயற்பாட்டை நேற்றுமுன்தினம் வடமராட்சிப்பகுதிக்கு விஜயம் செய்த கனடா நாடாளுமன்ற உறுப்பினரை மக்கள் நேரில்அழைத்துச் சென்று தெரியப்படுத்தினார்கள். (8-70)

# மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள புலிகளுடன் தொடர்புகொள்கின்றதாம் அரசு

கொழும்பு,ஜன.14

சுனாமியால் சேதமடைந்த வடக்கு - கிழககு பிரதேசங்களின் மீள் கட்டுமானப்பணிகளை விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்வதற்காக அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அவர்கள் தமது திட்டவரைவுகளை அனுப்புவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

சுனாமியால் சேதமடைந்த பிரதேசங்களைப் புனரமைக்கும் செயலணியின் தலைவர் மலிக் தித்த வெல. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுனாமியால் அழிந்த பிதேசங்களில் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகக் கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனங்கள், பொதுஅமைப்புகள் ஆகியவற்றுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்தது. அப்போது அவர் அக்கருத்தை வெளியிட்டார்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

மள்கட்டுமாணப் பணிகள் தொடர்பான திட்டவரைவுகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கவேண்டும். அத்திட்டவரைபுகளை மாத முடிவுக்குள் இறுதியாக்கி முன்னுரிமை அடிப்படையில் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பது குறித்து விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அவர்கள் தங்கள் திட்டவரைபுகளை தருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அனர்த்தத்தை நாம் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். புனரமைப்புப் பணிகளை அனர்த்தத்திற்கு முன்னிருந்த அதே நிலையில் மேற்கொள்ளும் எண்ணம் எமக்கில்லை. நவீனவசதிகளுடன், தற்காலத் தொழில்நுட்பத்துடனும் இணைத்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது அரசு.

15 இற்கும் 20 இடைப்பட்ட வருட நீண்டகால அடிப்படையில் புனரமைப்புப் பணிகளை அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது - என்றார்.

கூட்டத்தில் பேசிய கல்வி அமைச்சின் செயலாளரும் தேசிய செயற்பாட்டு அமைப்பின் பணிப்பாளருமான தாரா டிமெல் தெரிவித்ததாவது:-

சுனாமி அனர்த்தத்தால் மக்கள் படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் தமது வாழ்வாதாரங்களை முற்றாக இழந்தோர் இனங்காணப்படுவர். இவ்வாறானோரர் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர்.

இவர்களுக்கு அரசு மாதாமாதம் ஒரு தொகைப் பணத்தை வழங்குவது குறித்து ஆலோசித்து வருகிறது.

இதற்கு மேலதிகமாக மற்றுமொரு கொடுப்பனவு மிகவும் மோசமாகப் பாதிப்புற்றோருக்கு வழங்கப்படும். அத்தோடு அனர்த்தத்தில் பாதிப்புற்றோருக்கு தற்காலிக கூடார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்காலிக கூடாரங்களில் தங்கியிருப்போருக்கு மூன்று மாதத்தினுள் நிரந்தர வதிவிடங்களை அரசு ஏற்படுத்திக்கொடுக்கும் - என்றார் தாரா டிமெல். (க-8)

## அமைச்சர்கள் இருவர் வன்னி சென்றனர்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பார்வையிட வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்குத் திடீர் விஜயம்செய்திருந்தனர்.

வன்னிப் பகுதியில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காக அமைச்சர்கள் இருவர் சென்றுள்ளமை இதுவே முதற்றடவையாகும். இவர்களுடைய ஆதர வாளர்களும் இவர்களுடன் சென்று நிலைமை யைப் பார்வையிட்டனர். (க-8)

# சமூகபாதுகாப்புச் சேவைக்கு இங்கிருந்து 14 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்.ஜன.14

யாழ்.செயலக சமூக பாதுகாப்புச் சேவைப் பிரிவிற்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 14பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கொழும்பு பெண்கள் வலுவூட்டல் சமூக நலன்புரி அமைச்சு விரைவில் அனுப்பி வைக்கவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் 14 வெளிக்கள அலுவலர்களுக்குமான வதிவிடப் பயிற்சி எதிர்வரும் 21ஆம் திகதி வவுனியா மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெறும் என சமூகப் பாதுகாப்புச் சேவையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.சிவரஞ்சன் தெரிவித்துள்ளார். பயிற்சியை முடித்து வெளியேறும் வெளிக்கள அதிகாரிகள் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக சமூகசேவை அமைப்புடன் இணைந்த வகையில் சேவையாற்றவுள்ளனர்.

நியமனம் பெறும் வெளிக்கள அலுவலர்கள் ஒரு வருட தகுதிகாண் காலத்தின் பின்னர் நிரந்தர நியமனம் பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-185)

# மதுவரி நிலையங்கள் ஊடாக 3கோடி ரூபா வருமானம்

குடாநாட்டிலுள்ள மதுவரி நிலையங்கள் மூலம் மதுவரித்திணைக்களத்திற்கு கடந்த வருடம் மட்டும் சுமார் 3கோடியே 15லட்சத்து 24ஆயிரத்து 190ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது.

இத்தகவலை யாழ். மதுவரி நிலைய அத்தியட்சகர் என் சோதிநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பருத்தித்துறை, மல்லாகம், சங்கானை, யாழ்ப்பாணம் ஆகிய மதுவரி நிலையங்கள் மேற்கொண்ட கசிப்பு, அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனை, கள்விற்பனை ஆகியவை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட தண்டப்பணம் மூலமாகவும்-

வலிகாமம், தீக்கம் ஆகிய வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சாராய விற்பனை மூலமாகவும்-

இந்த வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மதுவரி நிலையத்தின் மூலம் 15லட்சத்து 80ஆயிரத்து 450ரூபாவும் - பருத்தித்துறை மதுவரி நிலையத்தின் மூலம் 5லட்சத்து 81ஆயிரத்து 8[illegible]0ரூபாவும்- மல்லாகம் மதுவரி நிலையத்தின் மூலம் 25லட்சத்து 68ஆயிரத்து 900ரூபாவும்- சங்கானை மதுவரி நிலையத்தின் மூலம் 9லட்சத்து 2ஆயிரத்து 200ரூபாவும் - வலிகாம வடிசாலையின் மூலம் 58லட்சத்து 90ஆயிரத்து 840 ரூபாவும், தீக்கம் வடிசாலை மூலம் 2கோடி ரூபாவும் வருமானமாகப் பெறப்பட்டது - என்றார். (ஐ-5)

## தேடல் பரீட்சை பரிசளிப்பு பிற்போடப்பட்டது

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய தேடல் பரீட்சையில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல் விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. நாளை மறுதினம் 16ஆம் திகதி நடைபெறவிருந்த இந்நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் உதயன் கேட்போர் கூடத்தில நடைபெறும் எனவும் - தேடல் பரீட்சையில் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களையும் பாடசாலை சார்பாக இரண்டு மாணவர்களையும் இந்நிகழ்விற்கு வருகைதருமாறும் - கழகத்தலைவர் கேட்டுள்ளார். (3-203)

## பாதிப்புற்ற ஹோட்டல்களின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.14

வடக்கு-கிழக்கில் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட விவரங்களை அனுப்பிவைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் 8, சுனாமிப் பாதிப்பினால் பாதிக்கப்பட்ட மேற்படி ஹோட்டல்கள் மற்றும் விவரங்களைத் தொழில்நுட்ப அலுவலரின் மதிப்பிட்டுடன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது

சுனாமிப் பாதிப்பினால் சுற்றுலாப் பயணிகளைக்கவரும் மையங்கள், பறவைகள் சரணாலயங்கள் மற்றும் கட்டடங்கள் என்பன முழுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

எனவே உள்ளூராட்சிசபைச் செயலாளர்கள், ஆணையாளர்கள், திட்டமிடற்பகுதிப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இதற்கு முக்கிய கவனம் செலுத்தி மதிப்பீட்டினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 47 ஹோட்டல்கள் சுனாமிப் பேரலையினால் அழிவடைந்துள்ளதாகவும் இதற்கு 192 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீள்கட்டுமானப்பணிக்குத் தேவையெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (10-185)


### ஒத்துமாறுதல்

புதுக்குடியிருப்பு வலய கலைப்பட்டதாரி பயிற்சி ஆசிரியர் ஒருவர், யாழ்ப்பாண மாவட்டத்தின் எப்பகுதியிலும் நியமனம் பெற்ற கலைப்பட்டதாரி பயிற்சி ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: T.P.: 0776 913006 அல்லது
0776 916104 அல்லது
திரு.ஞா.மரியதாஸ், அம்பிகை களஞ்சியம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
T.P.: 021 222 2511

மடுவலய கலைப்பட்டதாரி பயிற்சி ஆசிரியர் ஒருவர் வவுனியா தெற்கு/ மன்னார் வலயங்களில், யாழில் எப்பகுதியிலும் உள்ள ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு:
T.P.: 021 2263455



### இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

02.01.2005 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்ற எமது ஜ்ஷேட்ட புத்திரி

**செல்வி ச.சைலஜா**வின்

மங்கள நீராட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த பெரியோர்கள், உற்றார்கள், உறவினர்கள், அயலவர்கள் நாம் குருத்துவம் செய்யும் ஆலயத்தைச் சார்ந்தவர்கள், மங்கள வாத்தியம் வழங்கிச் சிறப்பித்த பருத்திநகர், நெல்லியடிக் கலைஞர்கள் இவர்களுடன் சேர்ந்து பிரத்தியேக உதவிகள் வழங்கிய அல்லையம்பதி நிறுவனங்களாகிய ஆலய பரிபாலன சபையினர், அல்லையம்பதி வாழ் மக்கள், ரோஜா மணப்பந்தல் ஸ்தாபனத்தார்கள், சன் ஒலி ஒளிஸ்தாபனத்தார், மயூரா பல்பொருள் அங்காடி, மயூரா தொலைத்தொடர்பகம், கரவெட்டி கலைவாணி வீடியோ ஸ்தாபனத்தார் ஆகியோருடன் முக்கியமாக அல்லையம்பதி இளைஞர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அல்லையம்பதி,
ஸ்ரீசிவசுப்பிரமணியர்
தேவஸ்தானம், துன்னாலை.

சிவஸ்ரீ,
ராம் சபாநாதக் குருக்கள்,
சந்தனலெட்சுமி குடும்பத்தினர்.



IELTS

Diploma in English

Certificate in English

இவ்வாரம் ஆரம்பம்

British Business School

B.B.S 140,Temple Road, Jaffna 021-2225796



### நன்றி நவில்கின்றோம்

நாட்டுப் பற்றாளர்
**திருமதி ஜோர்ஜ் பிலோமினம்மா**

26.12.2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் போது ஒளி இழந்த எங்கள் குடும்பவிளக்கின் நல்லடக்கத்திற்கு உதவிய போராளிகள், பொது மக்கள், காந்தருபன் அறிவுச்சோலை நிர்வாகம், பிள்ளைகள், கொக்கிளாய் அ.த.க.பாடசாலை ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மணற்குடியிருப்பு,
முல்லைநகர்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40805)



IIS - இதயம் கனிந்த தைத்திருநாள் வாழ்த்துக்கள்



மாணவர்கள், பெற்றோர்கள் நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரிற்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

– இயக்குநர்,
உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள்.


## உரிமத் தகடுகளைப் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் துவிச்சக்கரவண்டிப் பாவனையாளர்கள் தமது துவிச்சக்கரவண்டிகளுக்கான உரிமத் தகடுகளை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். மாநகர சபை அலுவலகத்தில் உரிய கட்டணம செலுத்திப் பெற்றுக் கொள்ளுாறு யாழ். மாநகர சபையின் பிரதம கணக்காளர் இராசநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (10-190)


### 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
13 – 07 – 1962

மறைவு
11 – 01 – 2002

**அமரர் சின்னராசா பாஸ்கரன் (பபி)**

மூன்று ஆண்டுகள் நொடிப்பொழுதில் ஓடி மறைந்ததே!
தீராத வேதனை மட்டும் தீர்ந்தபாடில்லையே!
மாறாத நினைவுகளால் மனமோ துடிக்குதய்யா!
ஆறாத வடுக்கள் ஆறாமல் இறக்கின்றனவே!
உங்கள் ஆத்மசாந்திக்காய் நாளும் இறைவனை நாடி நிற்கின்றோம்.

லிங்கவாசா,
வல்வெட்டி.

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள்,
சகோதரிகள், உறவினர்கள்.



### 14ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

மலர்வு
23 - 05 - 1942

உதிர்வு
09 - 01 - 1992



**இராசையா கந்தசாமி**

கீதா ஆபரண மாளிகை, சாவகச்சேரி

திதி: பஞ்சமி 14.01.2005

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆருயிர் தந்தையே - உங்களுடன்
நாம் வாழ்ந்த சுவடுகள்
நம் உள்ளத்தில் கலந்தாலும்
நீங்கள் எம் துயர் துடைக்க - இனி
நீங்காத பிறவி ஒன்று எடுத்தால்
மிகையாகாது தந்தையே!

சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

(40804)(24-19-45-42)



### CATWAS.COM Computer Academy

No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna. Tel. 021 - 222 3805

**புலமைப் பரிசில் - 2005**

வெல்லுங்கள் 50% ~ 100% வரையிலான புலமைப்பரிசில்

இவ்விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து அனுப்பவும்

**Application form**

Full name: ..............................
Address: ..............................
Date of birth: ..............................
Sex: ..............................
Courses: ..............................

.................. ..................
Date Signature

விண்ணப்ப முடிவு திகதி: 15-01-2005

பரீட்சை நடைபெறும்
திகதி: 24/01/2005
நேரம்: காலை 10.00 மணி

COURSES

1. Diploma in Microsoft Office
2. Diploma in Desktop Publishing
3. Diploma in Hard ware
4. Diploma in Video Mixing
5. Diploma in Web page Designing
6. Diploma in Visual Basic

பரீட்சையில் தோற்றுபவர்கள் இணைந்து கொள்ளக்கூடிய பிரிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பிரிவு | 01.02.2005 |
| 2ஆம் பிரிவு | 02.05.2005 |
| 3ஆம் பிரிவு | 01.09.2005 |

**பரீட்சைக்குத் தோற்றக்கூடியவர்கள்**

O/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும், ஆண்டு 11இல் கல்வி பயில்பவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்களும், பட்டதாரிகளும், கணனித் துறையில் ஆர்வம் உடைய அனைவரும் வயது வேறுபாடின்றி தோற்றலாம்.

பரீட்சைகள்: பொது அறிவு, பொது உளச்சார்பு சார்ந்ததாக தமிழ்மொழியில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை 21.01.2005 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விவரங்களைப் பெற மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்.

(சி-40414) (24-19-45-42)

# முல்லை மக்களுக்கு மீள்வாழ்வு அளிக்க மூன்று கட்டங்களாகத் திட்டம் வகுப்பு!

## புலிகளின் நேரிய கட்டமைப்புடன் பணிகள் ஏற்கனவே ஆரம்பம்

**கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற 'சுனாமி' கடல் அனர்த்தத்தில் இலங்கையிலேயே அதிகளவான பாதிப்புக்களை எதிர்நோக்கியது முல்லைத்தீவு மாவட்டம்.**

**அந்த மாவட்டத்தில் உறவுகளை - சொத்துக்களை - வாழ்விடங்களை - தொழில்வளங்களை இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பி, அவர்களுக்கு மீள்வாழ்வளிப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரிய வேகமான கட்டமைப்புடனான - வேலைத்திட்டங்களை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர்.**

**இந்த மக்களின் மீள்வாழ்வு செயற்றிட்டங்கள் மற்றும் சுனாமியால் முல்லைத் தீவில் ஏற்பட்ட பல்வேறு பாதிப்புக்கள் தொடர்பாக முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியை இங்கு தருகிறோம்.**



**கே: 'சுனாமி' அனர்த்தத்தினால் முல்லைத் தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகள் குறித்து...?**

ப: முல்லைத்தீவு நகரமும் அதனை அண்டிய பிரதேசங்களுமே இங்கு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக கள்ளப்பாடு, செல்வபுரம், நகர், வண்ணாங்குளம் போன்ற பிரதேசங்களே அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்தன.

நாயாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பிரதேசங்களில் பெரும் சொத்தழிவுகள் ஏற்பட்டன. முல்லை நகரம் முழுமையாகவே அழிந்திருக்கின்றது.

மூவாயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தும் காணாமற்போயும் இருக்கின்றனர். மேலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்து, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சை பலனளிக்காது உயிரிழக்கின்ற சம்பவங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

சொத்தழிவுகள் குறித்து இன்னமும் முழுமையான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

**கே: மீட்புப்பணிகள் உடனேயே ஆரம்பிக்கப்பட்டனவா?**

ப: 'சுனாமி' அனர்த்தம் ஏற்பட்டவுடன் எங்களுடைய தேசியத் தலைவரின் பணிப்புக்கு அமைவாக எமது சகல படையணிகளும் இதற்கான மீட்புப்பணிகளில் தீவிரவமாக இறங்கின. இரண்டு பகுதிகளாக இந்தச் சூழலை நாங்கள் எதிர்கொண்டோம்.

உடனடி மீட்பு நடவடிக்கையும் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியேற்றுகின்ற நடவடிகையும் இதிலே முக்கியமானதாகும்.

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்களுடைய தலைமையின் கீழ் மீட்புப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்தோம்.

மக்களைப் பராமரிக்கின்ற பணியிலே தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் போராளிகளும் ஏனைய தொண்டர் அமைப்புக்களின் உறுப்பினர்கள் கிராம சேவையாளர்கள் ஆகியோரும் இணைந்து செயற்பட்டனர். பின்னர், அந்தப் பணி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் விடப்பட்டது. அவர்கள் இன்று வரை அந்தப் பணியை முன்னெடுத்துக் கொண்டு வருகின்றனர்.

**கே: நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற மக்களுக்கான பராமரிப்பு எப்படியிருக்கிறது...?**

ப: தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இப்போது நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து பாதுகாத்து வருகின்றது.

அந்த மக்களின் மருத்துவ தேவைகளை தமிழீழ சுகாதார சேவ்வயினரும் மருத்துவப் பிரிவுப் போராளிகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். மக்களுக்கான ஏனைய தேவைகளைத் தமிழீழ நிர்வாக சேவையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த மக்களுக்கு வெளித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அவர்களை உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தி அவர்களின் மனதில் மீண்டும் நம்பிக்கையினை ஏற்படுத்துவதற்கும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

**கே: இந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஏதேனும் திட்டங்கள் இருக்கின்றனவா?**

ப: இப்போது மக்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். பாடசாலைகள் மீளவும் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டியிருப்பதால் அங்குள்ள மக்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது.

இப்போதைக்கு மக்களை தற்காலிகமாகச் சிறு கூடாரங்களை அமைத்துத் தங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அதற்கான வேலைகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முழுமையாகப் பொறுப்பேற்றிருக்கின்றது.

### முல்லை. மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் முகுந்தன் செவ்வி

முதலாம் கட்டமாக கள்ளப்பாடு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை உண்ணாப்புலவு என்ற இடத்தில் குடியமர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

குறைந்த பட்சம் மூன்று மாதம் தொடக்கம் ஆறுமாதம் வரைக்குமான காலப்பகுதிக்கு அவர்களைத் தங்கவைக்க இருக்கிறோம். இதற்கான உதவிகளைத் தொண்டு நிறுவனங்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியிருக்கின்ற மக்களும் வழங்க முன்வந்திருக்கின்றனர்.

இதற்குப் பின்னர் இந்த மக்களை நிரந்தரமாகக் குடியேற்றுதல் மற்றும் தொழில் வளங்களை ஏற்படுத்தி கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இதற்கான திட்டங்களைத் தமிழீழ திட்டமிடல் பணிமனை முன்னெடுக்கும்.

இந்தத் திட்டங்களைக் கூட்டாக வகுப்பதற்கென தமிழீழத் திட்டமிடல் பணிமனையுடன் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழங்களின் துறைசார் பேராசிரியர்கள், புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள எமது நிபுணர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் உள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தவும் ஏனையோரை வேறு இடங்களில் குடியமர்த்தவும் திட்டமிட்டுள்ளோம்.

கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்துக்குள் இருந்த மக்களுக்கு வேறு இடங்களிலுள்ள அரச காணிகளைப் பங்கீடு செய்து வழங்கத் தீர்மானித்துள்ளோம். அதனைவிட அதிகமான காணிகளை வைத்திருக்கின்ற தனியாருடனும் கதைத்து அவர்களிடமிருந்து ஒரு சில துண்டு காணிகளையாவது அன்பளிப்பாகப் பெற்று இந்த மக்களுக்கு வழங்க முயற்சி செய்கின்றோம். சிலர் தாமாகவே முன்வந்து தமது காணிகளில ஒரு பகுதியை பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

தற்காலிகமாகக் கூடாரங்களில் குடியமர்த்தப்பட்ட பின்னர் மக்களுக்கு 15 நாள்களுக்குத் தொடர்ந்து சமைத்த உணவு வழங்கப்படும். பின்னர் அவர்களுக்கு சமையல் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் உலர் உணவுப்பொருள்களையும் வழங்கத்திட்டமிட்டிருக்கின்றோம்.

**கே: பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட மக்களுக்கு அரசின் உதவி கிடைத்ததா...?**

ப: இந்தச் சம்பவம் நடைபெற்று நான்கு நாள்களுக்கு எமது மக்களுக்கு அரசாங்கத்தினுடைய எந்த உதவிகளும் கிடைக்கவில்லை. இலங்கையில் மிகவும் கணிசமான அளவு பாதிகப்பட்ட ஒரு பிரதேசமாக முல்லைத்தீவு இருக்கின்ற போதிலும் கூட இந்த மக்களுக்கு உடனடியாக உதவ அரசு இம்மியளவும் நடவடிக்கை எடுக்கவில்லை.

பின்னர் இப்போது தான் அரசு இந்த மக்களுக்கு ஒரு சில உதவிகளைச் செய்திருக்கிறது. அதுவும் கூட ஒரு நிறைவான உதவியாக இருக்கவில்லை.

இந்த நேரத்திலே தென்னிலங்கை ஊடகங்கள் வாயிலாக ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டுவரும் பிரச்சாரங்களில் கூறிவருவது போல இங்கு அதிகளவான உதவிகள் வழங்கப்படவில்லை. தென்னிலங்கையை விட வடக்கிற்கே அதிகளவான உதவிகள் அனுப்பப்பட்டிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பது விசமத்தனமானது; அப்பட்டமான பொய்.

**கே: அழிவடைந்துள்ள முல்லைத்தீவு நகரை எவ்வாறு மீளக் கட்டியெழுப்ப முடியும் என்று கருதுகிறீர்கள்?**

ப: முல்லைத்தீவு நகரத்தைப் பொறுத்த வரையில் நாங்கள் இராணுவத்திடமிருந்து அண்மைக் காலத்தில் தான் மீட்டெடுத்தோம். அந்த மீட்புக்குப் பின்னர் தான் இங்குள்ள மகள் தமது தீவிர முயற்சியின் மூலமாக இந்த நகரைக் கட்டியெழுப்பினார்கள்.

கடுமையான உழைப்பின் பின்னர் மெல்ல மெல்ல மக்கள் வீடுகளைக் கட்டினார்கள் தொழில நிறுவனங்களை அமைத்தார்கள்.

ஆனால், அந்த இடங்கள் எல்லாம் இப்போது பழைய நிலைக்கே திரும்பிச் சென்றிருக்கின்றன.

இந்த முல்லைத்தீவு மாவட்டத்தை மீண்டும பழைய நிலைக்குக் கட்டி வளர்போம் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. ஆனால், இங்கு ஏற்பட்டிருக்கின்ற பெருமளவான உயிரழிவுகள், சொத்தழிவுகள் என்பன அந்த மீள்கட்டுமானத்தை சற்றுத்தாமதப்படுத்தும் என்று கருதலாம்.

அதுமட்டுமல்ல முன்னரைப் போலன்றி இப்போது மக்கள் கடலுக்குள் செல்வதற்கே பயப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு அந்தப் பயங்களை நீங்கச் செய்து அழிந்து போன தொழில் வளங்களை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் இந்த இடங்களை மீளக் கட்டியெழுப்பலாம்.

இந்த மீள்கட்டுமானப் பணிக்கு புலம்பெயர்ந்த எங்கள் உறவுகளும் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் உரிய பங்களிப்புக்களைச் செய்யவேண்டும்.

**கே: மீனவர்களுக்கு மீண்டும் தொழில் வாய்ப்புக்களை வழங்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?**

ப: சுண்டிக்குளம் தொடக்கம் நாயாற்றுப் பாலம் வரையிலான கடற்கரைப் பகுதியிலே வாழ்கின்ற மக்களைப் பொறுத்தவரை ஒருவரிடமும் இப்போது மீன்பிடிப் படகுகள் இல்லை. எந்தவொரு படகும் திருத்தக் கூட முடியாத நிலையில் அலையில் சிக்குண்டு துண்டு துண்டாகிப் போயுள்ளன.

இப்போது ஓரளவுக்கு 'சுனாமியின்' தாக்கத்திலிருந்து விடுபட்டு - பயம் தெளிவடைந்து மீண்டும் தொழில் செய்வதற்குத் தயாரான மனநிலைக்கு மாறிவருகின்ற போதிலும் அதற்கான ஆதாரங்கள் அவர்களிடம் இல்லை.

எனவே, அந்த மக்களுக்கு தனித்தனியாக படகுகளை வழங்காவிட்டாலும் இரண்டு அல்லது மூன்று பேருக்கு ஒரு படகு என்ற விகிதத்தில் வழங்கினால் கூட அது அவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

அது தொடர்பான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுகழகம் மேற்கொண்டு வருகின்றது.

அலையில் சிக்குண்ட படகுகளில் இருந்த இயந்திரங்களை பழுதுபார்க்கும் பணியில் கடற்புலிகளின் விசேட அணி ஒன்று ஈடுபட்டிருக்கிறது.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் சேதமடைந்த மீன்பிடிப்படகுகளை இலவசமாகத் திருத்தி வழங்குவதற்கென தனிப்பிரிவு ஒன்றை நியமித்திருக்கிறார்.


செவ்வி கண்டவர்
**அற்புதன்**

**கே: புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்களின் உதவிகள் எப்படியிருக்கின்றன...?**

ப: புலம்பெயர்ந்த மக்களின் உதவிகள் மிகவும் கணிசமான அளவில் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவுமாறு எமது தேசியத் தலைவர் அவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு புலம்பெயர்ந்த எமது தமிழ் உறவுகள் தாராளமாக உதவிகளைச் செய்கின்றன. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாகவும் வேறு சில அமைப்புக்கள் ஊடாகவும் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித் திட்

(18 ஆம் பக்கம் பார்க்க)





'சுனாமி' அனர்த்தத்தினால் முற்றாக நிர்மூலமாக்கப்பட்ட முல்லைத்தீவு கள்ளப்பாடு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கென உண்ணாப்புலவு என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக கூடாரங்களைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:செவ்வியாளர்)

## ஒத்துமாறல்

வலிகாம வலயத்திற்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற ஒருவர் கொழும்பில் ஆசிரியர் நியமனம் அல்லது நிர்வாகத்துறையில் நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு:
T.P.: 0776 157739, 0777 224519


## கலையரங்கத் திறப்பு விழா

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் ஆ.சின்னத்தம்பி நினைவாக அமைக்கப்பட்ட கலையரங்கம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், கலையரங்கத்தினை திருமதி மு.சின்னத்தம்பி நாடாவை வெட்டித் திறந்துவைப்பார். இதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (எ-7)

# ஸ்ரீலங்கா தேசிய வர்த்தக சம்மேளனம்

## சுனாமி அனர்த்த புனர்வாழ்வு மற்றும் புனர் நிர்மாண வேலைத்திட்டம்

## சுனாமி அனர்த்த மதிப்பீட்டுப் படிவம்

இச்சம்மேளனத்தின் பிரிவினால் மதிப்பீடு மேற்கொள்ளும் பொருட்டு அண்மைய சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான சகல சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் இப்படிவத்தை உடனடியாகப் பூர்த்திசெய்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

பூர்த்திசெய்யப்பட்ட படிவங்களை *தேசிய சம்மேளனச் செயலகம், சுனாமி அனர்த்த புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பிரிவு, இலக்கம் 450, டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10* என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். தொலைபேசி இலக்கங்கள் 5374805, 5374806, 5374807 அல்லது

5374801 - 3
தொலைநகல் : 2689596
மின்னஞ்சல் : smerehab@nccsl.lk.

மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சிகளுக்கான மாவட்ட இணையம் (DAMSMES) மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள டயலொக் தொடர்பு மையங்களுடனும் தொடர்புகொள்ளலாம்.

1) வர்த்தகத் தகவல்கள்
   a) வர்த்தகத்தின் பெயர்:........................................
   b) வர்த்தக முகவரி:........................................
   ........................................
   c) தொடர்புகொள்ளவேண்டிய விவரங்கள் (இருந்தால்):........................................
2) இன்றைய வியாபாரத்தின் தன்மை (நடவடிக்கைகள்):........................................
3) முற்பண முதலீடு:........................................
4) இந்த அழிவினால் நீங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?

   ஆம் ☐ இல்லை ☐

   ஆம் எனில்
   a) உங்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கான காரணங்கள் (உ+ம் : ஊழியர்கள், சொத்துக்கள், உபகரணங்கள்.... மேலும்.)
   ........................................
   ........................................
   ........................................

   இல்லையென்றால்
   b) இந்த அழிவினால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டுள்ளீர்களா (உ+ம் : வாடிக்கையாளர், கொள் முதலாளர் மேலும்)
   ........................................
   c) சேத விவரங்கள் ........................................
5) உங்களுக்குத் தேவையான உதவி ........................................
   ........................................
6) உங்கள் பிரதேசத்திற்கு எங்களின் ஒத்தாசை :
   வங்கிகள் ........................................
   ........................................
   அரசாங்கம்/முகவர்கள்........................................
   ஏனையவை (குறிப்பிடுக)........................................

பெயர்.................... கையொப்பம் .................... திகதி ....................

## முல்லை மக்களுக்கு...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

டங்களைப் போட்டு அதன் மூலம் கிடைக்கின்ற நிதியை சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு வழங்குவதில் அங்குள்ள உறவுகள் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாக அறிகின்றோம்.

**கே: 'சுனாமி' அனர்த்தத்தினால் முல்லைத்தீவில் கடற்புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் மிகவும் அதிகம் என்று தென்னிலங்கை ஊடகங்கள் கூறுகின்றனவே...?**

ப: இயற்கை அனர்த்தத்தை வைத்துக் கொண்டு, அதனால் ஏற்படுகின்ற படை அழிவுகளைக் கொண்டு வெற்றி தோல்வி கதைப்பது மனித நேயமான செயற்பாடல்ல.

அதனால்தான் தென்னிலங்கை சக்திகளின் இந்தக் கருத்துக்கள் தொடர்பாக எமது தலைமையோ, தளபதிகளோ பெரிதாக எதனையும் கூறிக்கொள்ளாமல் இருக்கின்றனர் எங்களுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று செய்தி ஊடகங்கள் வாயிலாகக் கூறிக் கூறி எமது மக்கள் மத்தியில் ஒரு பயப் பீதியை ஏற்படுத்த அரசு முனைகிறது.

எங்களைப் பொறுத்த வரையில் இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை இது திட்டமிடப்பட்டு செய்யப்படுவதில்லை. இயற்கையின் அனர்த்தத்தில் இனவேறுபாடு, மதவேறுபாடு பார்க்கக்கூடாது. ஆனால், ஸ்ரீலங்கா அரசினுடைய இவ்வாறான பொய்ப்பிரசாரங்கள் எமக்கு வேதனையை அளிக்கிறது.

ஸ்ரீலங்காவினுடைய கடற்படைக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருப்பது அனைவருக்குமே தெரிந்த உண்மை. ஆனால் அதைவைத்து வெற்றிவிழா கொண்டாடவோ குதூகலிக்கவோ நாங்கள் தயாரில்லை.

கடல் அலை வந்துபடுகின்ற தூரத்திலே காவலரண் அமைத்துத்தான் ஸ்ரீலங்காவின் கடற்படைகள் காவல் காத்துக்கொண்டிருந்தன.

அதிலும் மீண்டும் சண்டை ஒன்று மூளலாம் என்ற நிலைப்பாடு இருந்த காலப்பகுதியில் முப்படைகளில் கடற்படையையே அரசு கூடுதலாகப் பலப்படுத்தியது. எல்லையோரங்களில் கடறபடையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால்தான் அவர்களுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டது. அதனை வைத்துக்கொண்டு தங்களைப் போலவே எங்களுக்கும் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று கருதி அவர்கள் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர்.

எங்களுடைய தலைவருடைய வழிநடத்தலும் கடற்புலிகளின் தளபதியின் நெறிப்படுத்தலும்தான கடற்புலிகளின் உயிர் இழப்பைக் குறைத்திருக்கின்றன.

இந்த அனர்த்தத்தினால் கடற்புலிகளுக்கோ எங்களுடைய பலத்துக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ★


பொங்கல் வெகுமதி இன்றும் நாளையும்

வெளிநாட்டு அழைப்புக்கள்

5/= மட்டுமே!

லேசர் பிரிண்ட் - 5/=

கணேசன் கொமினிக்கேஷன்ஸ்
கொக்குவில்



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2157847 இலிருந்து 2167486 வரை

சீட்டிழுப்பு இல. 1572 திகதி 12.01.2005

வெற்றி எண்கள்: 08 38 45 47 56

போனஸ் எண்: 41

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 63 | 10,000/- | 6,30,000/- |
| 3 | 3,026 | 500/- | 15,13,000/- |
| 2 | 50,873 | 20/- | 10,17,460/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த இலக்கம் 08 (போனஸ் எண் தவிர்ந்து) | 61,911 | 10/- | 6,19,110/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.43,79,570/-

இந்த சனிக்கிழமை ஜக்பொட்

Rs. 19,81,950/-

தொடர் இல. 3090177 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 15 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2159157-0-01
2159540-9-93
2158915-9-41
2162745-6-14
2160697-6-37

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



# UNIT

போட்டியாளர்களுக்குப் பொறாமை
வாடிக்கையாளர்களுக்கு குதூகலம்

**UNI MULTIMED STA Internet Ready** — Rs 49,900/-
Intel 2.4 Ghz
Run @ 533 MHz FSB feature Ungradable Possible
P4 533 MHz FSB Motherboard
5.1/6.1 channel sound blaster
100 Ethernet, 6 USB 2.0 Ports
2 Serial Ports, 1 Parallel Port
1.44 FDD
128 MB DDR-RAM
40 GB Hard Disk
52 x CDROM
ATX Tower front USB
Enhanced Keyboard
Enhanced scroll Mouse
Multimedia speaker
Data/Fax/Voice Modem
15" World No. 1 Dell Color Monitor.

**UNI DEV EXPERT** — Rs 63,900/-
IntelP4 2.4 GHz Hypher Thread processor
800 FSB HT support Mother Board
64MB 8X AGPVGA Setup
5.1/6.1 channel 3D surround sound blaster
100 MBPS fast Ethernet
8X USB 2.0 ports serial & parallel ports
1.44 Floppy Drive
256 MB DDR
80 GB 7200 RPM HDD
ATX Tower with SMPS and Front USB
16X Sony DVD ROM/52X Sony CD-RW
Enhanced Keyboard
Enhanced scroll Optical Mouse
15" World No. 1 Dell Color Monitor.

**UNI Prostaech Internet Ready** — Rs 83,900/-
Intel P4 3.0 GHz-HT processor @ FSB 800
Motherboard with 800FSB along with SATA 1.5 Gb/s
8 X AGPVGA, 5.1/6.1 channel sound blaster
100 Ethernet, 8 USB 2.0 Ports
2 Serial Ports, 1 Parallel Port
1.44 Floppy Drive
256 MB DDR
80 GB SATA Hard Disk
52 X CDROM
COMBO DVD-CDROM/CD-RW
ATX Tower with SMPS
Enhanced Keyboard, Optical Mouse
Multimedia speaker
Data/Fax/Voice Modem
15" World No. 1 Dell Color Monitor.

**UNI PRESTA** — Rs 105,900/-
Intel P4 2.4 GHz Hypher thread Processor with 1024
Press special Tuned 800 FSB mother board
256 MB DDR (333/400 Mhz)
80 GB 7200 RPM High speed UATA Hard Disk
52/56 X CDROM Drive (Sony/Asus/Samsung)
52/32/52 X Sony CD-RW
1.44 Sony Floppy Disk Drive
Multimedia Enhanced Keyboard
800 DPI High-End Optical Mouse
HP Laserjet Printer
2400 DPI Scanner
DCP 600 VA Auto shutdown UPS
15" World No.1 Dell Color Monitor.

More components & Models are available.

Free

மேலதிக தகவல்களுக்கு நேற்றைய பத்திரிகையில் அல்லது நேரில்

சகல கொம்பியூட்டர் பாகங்களுக்கும் வைக்கக்கூடிய
Computer Table, Filter Glass, Dust Cover இலவசம்

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

Universal Technology,
Station Road,
Chunnakam.

# எஸ்.பியின் விடுதலைக்கான முயற்சி தொடர்ந்து இடம்பெறும்

## சிறையில் அவரைச் சந்தித்தபின் ரணில் அறிவிப்பு

எஸ்.பி. திஸநாயக்காவின் விடுதலைக்கான முயற்சிகளை ஐக்கிய தேசியக் கட்சி கைவிட்டுவிடவில்லை. சர்வதேச மட்டத்திலும், உள்ளூரிலும், அவருடைய விடுதலைக்கான நடவடிக்கைகள் தொடரும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை சந்தித்து நலன் விசாரித்தார் ரணில். பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலை பிரதான வாயிலில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

எஸ்பி.திஸநாயக்க என்றும்போல் தெம்புடனேயே காணப்படுகிறார் "எனக்காவது சிறையில் தங்க இடமிருக்கிறது, நேரத்திற்குச் சாப்பாடு கிடைக்கிறது, ஆனால், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பல லட்சம். பேர் அகதிகளாகத் தங்கவும் இடமின்றி, ஒரு வேளை சாப்பாட்டிற்கும் வழியின்றி வாழ்கின்றனர். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல வாழ்க்கையைப் போக்கி மறுவாழ்வு அளிக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுங்கள்" என்றும் அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். அவருடைய பெருந்தன்மையைப் பாராட்டுகின்றேன் - என்றார் ரணில் விக்கிரமசிங்க. அதே வேளை, எஸ்.பி. திஸநாயக்காவுக்கு இரண்டு வருட கடுழியச்சிறைத் தண்டனை வழங்கியதன் மூலம் உயர் நீதிமன்றம் அரசமைப்பையே மீறிவிட்டது - என்றும் அவர் கூறினார்.

"அரசமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பால் சென்றே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு பழிவாங்கல் நடவடிக்கை என்பது வெளிப்படையாகின்றது. எனவே சர்வதேச நீதிமன்றத்தின் முன் இவ் விடயத்தைக் கொண்டு செல்வதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோம். "எஸ்.பி. திஸநாயக்காவுக்கு விடுதலை கிடைக்கும் வரை உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் எமது நடவடிக்கைகள் தொடரும்" எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார். (எ-க)

C.C.A சுன்னாகம் A/L 2007

| பொருளியல் | கணக்கீடு | வணிகக்கல்வி |
|---|---|---|
| உதயன் | S. தவா | முரளி |
| B.B.A(Spl) | B. Com (Acc) | B.B.A(Fm.spl) |

ஜனவரி-16 4.00 p.m

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை கனகரட்ணம் (இராசதுரை)

தாவடியைச் சேர்ந்த செல்லத்துரை கனகரட்ணம் (இராசதுரை) அவர்கள் நேற்று (13.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரையின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் பேரின்பநாயகம் (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் லலிதா, றஜனி, அமிர்தலிங்கம் ஆகியோரின் மாமனாரும் பாக்திக், நதிக்கா, ஜெயபிரகாஸ், மோகனபிரகாஸ், எழில்பிரகாஸ், தமிழ்பிரகாஸ், சிந்துஜா, தனுஜா, றெனுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.* (சி-40434)(15-29-14)

தகவல்:
அமிர்தலிங்கம் (மருமகன்).

### சொக்கலிங்கம் பரராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 18/4, பீ.ஏ.தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் பரராஜசிங்கம் நேற்று (13-01-2005) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதப்பிரியா, பரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருவரன், சுபமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் காருண்ணியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11A, பொஸ்வெல் பிளேஸ்,*
*கொழும்பு-6.* T.P. 2360659 (40824)(15-29-14)

தகவல்:
ப.பரந்தாமன் (மகன்).

## மிதிவெடி வெடித்ததில் இளைஞர் காயம்!

மாட்டை மேயக்கட்டுவதற்காக புற்தரைக்குக் கொண்டு சென்றவேளை மாடு மிதிவெடியில் சிக்கி இடது பின்கால் கணைக்காலுடன் இழந்து காயமடைந்தது. அதனைக் கொண்டு சென்றவர் மிதிவெடிச் சிதறல்களினால் இடது பக்க காலிலும் கையிலும் காயமடைந்தார்.

வளலாயில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வளலாய் மேற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் நவஜீவன் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார்.(எ-15)

2007 A/L
Chris.
Mrs.A. மல்லிகா
Eco.
B.கஜீதரன்
Tamil
S. சீவா
Log.
S.கலைச்செல்வன்
Geo.
ஆசிரியர்
Drama
M.மயூரன்
(40809)
SHAMROCK
J/Eachchamoddai Rd.

## காங்கேசன்துறை, காலி துறைமுக புனரமைப்புப் பணி நெதர்லாந்திடம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறை மற்றும் காலி துறைமுகங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு நெதர்லாந்து அரசு முன்வந்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட காலி மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களைப் புனரமைக்க சுமார் 400 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது நெதர்லாந்து அரசு இத்துறைமுகங்களை நேரடியாகப் புனரமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக காலித்துறைமுகத்தை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. சுனாமி அனர்த்தத்தால் இலங்கையின் பெரும் பாலான மீன்பிடித்துறைமுகங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அவற்றை மீளக்கட்டியெழுப்ப நீண்டகாலமாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

லஷ்சுமி இணுவில்
எமது ரசிகப் பெருமக்களுக்கு இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
விஜயகாந், லய, சீதா, சரத்பாபு, ராதாரவி நடித்த
கஜேந்திரா (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

## முக்கிய அறிவித்தல்

வருடாந்த பொதுக்கூட்டம் 2004 பிற்போடப்பட்டிருந்த வட பிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2005.01.18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குப் பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற உள்ளதால் மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சிநிரல்

1. பொதுச்சுடர் ஏற்றல்
2. கொடியேற்றல்
3. அகவணக்கம்
4. தலைமை உரை
5. உதவி ஆணையாளர் உரை
6. புதிய முதலீட்டிற்கான அங்கீகாரம்
7. புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு
8. சிறப்புரை
9. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

கி.பாஸ்கரன்
தலைவர்.

(சி-40432)

க.சி.மணியம்
செயலாளர்.

D.C.A.
மக்கள் வங்கிக்கருகில்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2005 2006
G.A.Q., 1st in Com.
B.A., B.A. Part -1, Final
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
(சி-40347) சனி, ஞாயிறு 8.00 a.m.

## ஒத்துமாறல்

வலிகாமத்தில் அரச பொது நிர்வாகத்தில் நியமனம் பெற்ற பட்டதாரிகள் மூவருடன் யாழ். - கிளிநொச்சி உட்பட்ட பிரதேசங்களில் ஆசிரிய நியமனம் பெற்ற பட்டதாரிகள் மூவர் ஒத்துமாற விரும்புகின்றனர். விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

Cell No: 0776116453
Cell No: 0777246126
Cell No: 0777159423 (40822)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 5'6" உயரமுடைய பிரித்தானியாவில் பட்டம் பெற்று பொறியியலாளராகக் கடமையாற்றும், பிரஜாவுரிமையுள்ள 30 வயதுடைய உத்தராடம் 4 ஆம் காலில் பிறந்த, 28 பாவமுடைய மணமகனுக்கு அழகான, படித்த மணமகள் தேவை. மணமகன் விரைவில் இலங்கை வரவுள்ளார். விரும்பியவர் குறிப்புடனும் குடும்ப நிலைவரத்துடனும் தொடர்புகொள்ளவும். C/O உதயன் 2473 (40813)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
ஜெய்ஆகாஷ், ஸ்ரீதேவிகா நடித்த
இராமகிருஸ்ணா (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விசேட காட்சியாக இரவு 9.00 மணிக்கு அர்ஜுன் நடித்த ஜெய்சூர்யா

ராஜா யாழ்ப்பாணம்
ரசிகப் பெருமக்களுக்கு எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.
இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா
இயக்குநர்: ஹரி



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
எமது ரசிகர்களுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின பொங்கல் வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்



தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)
பதிவுகளுக்கு: யாழ்.பெயின்காடின்,
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
நாகம்ஸ் சினிமா (C/39654)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
ரசிகர்களுக்கு எங்கள் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. இன்றுமுதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
பிரசாந், சினேகா, வடிவேல், மந்கள் நடித்த
ஆயுதம்
கா.நேரம்:10.30, 2.30, 6.30, 9.30



இதோ! ஒரு பொங்கல் பரிசு... 1st
எமது நிறுவனத்தின் முதலாம் ஆண்டு சேவைநிறைவையொட்டி வழங்கும் சிறப்புச் சலுகைகளில் ஒன்றாக...
முற்றிலும் புதிதாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி ஒன்றினை இலவசமாகப் பயிலும் அரிய சந்தர்ப்பம்!!!
பதிவுக்கட்டணம் மட்டுமே!!!
பதிவுகளை 20-01-2005 இற்கு முன்பாக மேற்கொள்ளவும்
Diploma in Information Technology
Basic Information Technology PC Handling
Word processing package - Microsoft Word
Spreadsheet Application - Microsoft Excel
Database Management - Microsoft Access
Animation - Microsoft PowerPoint & Gif Animator
Introduction to Programming - Java, C/C++, VB
Introduction to Photo Mixing - Photoshop
Introduction to Internet & E-Mail
Printing, Scanning, Disk & PC Management



அனேக வடமராட்சி, தென்மராட்சி மாணவரின் வேண்டுகோளிற்கமைய பேருந்துகளின் நேரத்திற்கேற்றவகையிலான பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன!
பதிவுகளுக்கும் விசாரணைகளுக்கும்....
eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
உடுவில் வீதி, மருதனார்மடம் ☎ 021 - 4590222

திரைப்படப் பிரியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
மனோகரா திரையரங்கில் காண்பிக்கப்படும் திருப்பாச்சி சினிமாவுக்குப் பல்கனி நுழைவுச்சீட்டு அல்லது
ராஜா திரையரங்கில் காண்பிக்கப்படும் ஐயா சினிமாவுக்குப் பல்கனி நுழைவுச்சீட்டு
CDS CITY நிறுவனத்தில் இரண்டு CD இற்களைப் பெற்று இந்த இலவச நுழைவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
இவ்வரிய சந்தர்ப்பம் முதல் நூறு (100) வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.
CDS CITY
205/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 708708 (40755)

# பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த்துப் பேச்சு நடத்தினார். சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர் மத்தியில் உரையாற்றியபோதே பீற்றர் ஹரோல்ட் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதங்களை நாம் நேரில் பார்வையிட்டுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கு விடுதலைப் புலிகளின் தரப்பில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் பற்றி இன்றைய சந்திப்பில் விரிவாக ஆராய்ந்தோம்.

அழிவுகளிலிருந்து மீண்டுள்ள சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த வேண்டும். அதற்கு எம்மாலான சகல உதவிகளையும் எவ்வித வேறுபாடுகளுமின்றி அனைத்து மக்களுக்கும் வழங்குவோம்.

சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தைப் பெற்று அனைவரையும் ஒருங்கிணைத்து செயற்பட முயல்வோம். இந்த விடயத்தில் இலங்கை அரசும் அக்கறையுடன் செயற்படும் என எதிர்பார்க்கின்றோம். அதேபோல அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். நாம் அரசியல் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்க முன்வரவில்லை. எவ்வித பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்கும் உதவி கிடைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். அதற்கான முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவிகளை நாடியுள்ளோம். அவர்கள் வழங்கும் ஒத்துழைப்புடன் இந்த நாட்டுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளை வழங்குவோம்.

இலங்கை அரசும் எல்லா மக்களையும் ஒருங்கிணைத்து பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்காலத்தை நல்லமுறையில் கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்டுடன், அசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலெக்சான்டோ பியோ, உலக வங்கியைச் சேர்ந்த நரேஷா துரைசாமி, ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த பிரியான் ஸ்மித் மற்றும் யப்பான் அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்தவர்களான ரொமோயுக்கி ஹிமுரா, கக்குமி உஷமா, மிட்சு ஓ குவாகுச்சி ஆகியோரும்-

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் சிரான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-ப-5)

# மூவினப் பிரதிநிதிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை மீட்பதற்கான நிவாரணப் பணிகளுக்கும் கட்டமான நடவடிக்கைகளுக்கும் பெருமளவில் உதவ சர்வதேச சமூகம் விரைந்து முன்வந்திருக்கின்றது.

இந்த உதவிகள் பாதிக்கப்பட்ட முத்தரப்பினருக்கும் பாதிப்புக்கு ஏற்ற வகையில் சரிவரப் பகிரப்படவேண்டியது அவசியமாகும். அத்தகைய நடவடிக்கைக்காகவே நியாயமான யோசனை ஒன்றை நோர்வே அனுசரணையாளர் ஊடாக் நாம் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

சர்வதேச உதவிகளைத் தேசிய ரீதியில் பகிர்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய முத்தரப்பினரின் பிரதிநிதிகளையும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு செயலணியை அமைக்கவேண்டும்.

தமிழர் தாயகத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் இதேபோன்ற பணியை பிராந்திய ரீதியில் கவனிப்பதற்கு இதேபோன்ற பிராந்திய செயலணிகளை, மூவினத்தவரையும் இணைத்து உருவாக்கவேண்டும்.

அதற்கு அடுத்த கட்டமாக மாவட்ட மட்டத்தில் எமது பிரதேசத்தில் ஏற்கனவே நாம் செயலணிகளை அமைத்துவிட்டோம். அவை சுறுசுறுப்பாகவும் திட்டமிட்டவகையிலும் சிறப்பாக இயங்கத் தொடங்கியுள்ளன.

எமது யோசனைகளின் அடிப்படையில் தேசிய மற்றும் பிராந்திய செணிகள் அமைக்கப்பட்டதும் அவற்றின் கீழ் இந்த மாவட்ட செயலணிகளின் செயற்பாடுகள் கொண்டு வரப்படும்.

இந்தத் தேசிய, பிராந்திய, மாவட்டச் செயலணிகளில் மூவின மக்களும் தத்தமது பிரதிநிதிகளை நியமிக்க வாய்ப்பளிக்கவேண்டும். இன்று நாடு எதிர்நோக்கும் இந்தத் தலை யாய பிரச்சினை அரசியல் விவகாரமல்ல. அது மனிதாபிமானச் சிக்கல். அந்தச் சிக்கலுக்கு அவசரமாகவும் விரைந்தும் தீர்வும் நிவாரணமும் காணவேண்டிய நிலையில் மக்களின் தலைமைகள் உள்ளன.

எனவே, இவ்விடத்தை அரசியல் விவகாரமாகப் பார்க்காமல், மனிதாபிமான நெருக்கடியாகப் பார்க்கவேண்டும் என நாம் கோருகிறோம்; வற்புறுத்துகின்றோம்.

அதனால்தான் இந்தத் தேசிய, பிராந்திய செயலணிகளை அரச கட்டுப்பாட்டு நிறுவனமாக்காமல் சுதந்திர அமைப்பாகச் செயற்படுத்த நாம் கோருகின்றோம்.

இந்த விவகாரம் தொடர்பாகப் பல்வேறு அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனாதிபதி சந்திரிகா அமைக்கத் திட்டமிடும் உயர் சபை (Apex Body) பயனற்றது என நாம் நினைக்கின்றோம்.

அத்தகைய சபையில் தமிழர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் பத்தோடு பதினோராவது தரப்பாக அமர்வதில் அர்த்தமில்லை என்றும் கருதுகிறோம்.

ஆகையால்தான் ஜனாதிபதி சந்திரிகாவின் உயர் சபைத் திட்டத்தை நாம் கவனத்தில் எடுக்கவில்லை.

இப்பிரச்சினையை அரசியல் விடயமாக்காமல் - பாதிக்கப்பட்ட மூவினத்தவர்களையும் இணைத்துச் சுமுகமாக நிவாரண மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் திட்டத்தை முன்வைத்தோம்.

எமது யோசனைக்கு அரசு இணங்காவிட்டால் தமிழர் தாயகப் பிரததேசத்துக்கான நிவாரண, மீள் கட்டுமான உதவிகளை நேரடியாகத் தமிழர் தாயகத்துக்கு வழங்கும்படி சர்வதேச சமூகத்தைக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை.

நாம் முன்வைத்த யோசனைக்குக் கடந்த பத்து நாள்களாகியும் பதில் ஏதும் தராமல் அரசு இழுத்தடிக்கின்றது. ஆனால், இவ்விவகாரத்தில் தனக்கும் விடுதலைப் புலிகளாகிய எங்களுக்கும் இடையில் இணக்கமான - சுமுகமான - உடன்பாடு இருப்பது போன்று ஒரு மாயத்தோற்றத்தைச் சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்கு அரசுத் தலைமை முனைந்து நிற்கின்றது.

சர்வதேச உதவிகளைத் தனது கைக்குத் தனித்துத் திரட்டிக்கொள்ளும் அரசின் குள்ளநரித் திட்டத்தின் வெளிப்பாடே இச்செயற்பாடு - என்றார் அவர். (உ)

# இலங்கைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வரும்போது சுனாமியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் தமிழர் தாய கப் பகுதிகளுக்கும் விஜயம் செய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியி ருந்தார்.

20 வருடங்களாகத் தொடர்ந்த யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற ஈழத் தமிழர்களில் மிகப் பெருமளவிலானோர் கனடாவிலேயே தஞ்சமடைந்துள்ளனர். இதனால், இலங்கை வருகையின்போது கனேடியப் பிரதமர் தமிழர் தாயகப் பகுதியில் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் விஜயம் செய்வது தார்மீகக் கடமை என்று புலிகள் வலியுறுத்தினர்.

இதுதொடர்பான தமது கோரிக்கையொன்றையும் புலிகள், கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகத்தில் சமர்ப்பித்துள்ளனர். ஆனால், இலங்கை அரசின் இராஜதந்திர நகர்வுகள் காரணமாக கனேடியப் பிரதமர், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குச் செல்லமாட்டார் என்று தெரிகின்றது.

எனினும், அவர் இலங்கை வந்ததும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசுவதற்கு முன்பாக, தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு 25 நிமிடநேரம் ஒதுக்கியுள்ளார் என்று பிரதமரின் பயணத்தைத் திட்டமிடும் அதிகாரியொருவர் ரொறண்டோவில் தெரிவித்தார்.

ஏற்கனவே ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் பாதிக்கப்பட்ட புலிகளின் பகுதிகளுக்குச் செல்வதை அரசு தடுக்கின்றது. இதனால், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவுகளில் நிரந்தரமான விரிசல் ஏற்பட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் கனேடியப் பிரதமரும் புலிகளின் பகுதிகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டிருப்பது தமிழர் தரப்பை மேலும் சீற்றமடையச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)

# கனடா வழங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடா உதவிப் பொருள்களை வழங்கவுள்ளது. இந்தப் பொருள்கள் அனைத்தும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, யுனிசெவ், ஒக்ஸ்பாம் முதலிய அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலமே மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

உதவிப் பொருள்கள் எக்காரணங்கொண்டும் இலங்கை அரசிடம் கையளிக்கப்படமாட்டாது.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் சுனாமி பாதித்த மக்களுக்கான கனடாவின் உதவிகள் நேரடியாகச் சென்றடைய வழிசெய்யப்படும். அழிவுகளைச் சந்தித்த மக்களுக்கு இன, மத, வேறுபாடுகள் இன்றி உதவிகள் வழங்கப்படும் - என்றார். (எ-7-12-13)

# சுனாமி பாதித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.டி.பியினருக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது என்றும் - விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

"சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியில் அரசு எந்தவித வேலைகளையும் முனைப்புடன் செய்யவில்லை. எமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் எந்த அபிவிருத்தியும் நடைபெறவில்லை. ஒழுங்கான நிவாரண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. உலகநாடுகளிலிருந்துவரும் உதவிகள்கூட சகல பிரதேசங்களுக்கும் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை" - என்று கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவித்தார் கேணல் சொர்ணம்.

நிவாரண நடவடிக்கைகளில்இராணுவத்தினரின் தலையீடுகள் தொடர்ந்தவண்ணமிருக்கின்றன எனக் குறிப்பிட்ட அவர், போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் இராணுவத்தின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தாம் கொழும்பு சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் இதுதொடர்பாகப் பேசுவதாகத் தெரிவித்தார்.

இப்படிப்பட்ட சந்திப்புகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் எனச் சொர்ணத்திடம் அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த ஆண்டு திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதியாகக் கேணல் சொர்ணம் பொறுப்பேற்றபின்னர் கண்காணிப்புக்குழுத் தலைவரை அவர் சந்தித்துக் கலந்துரையாடியிருப்பது இதுவே முதல் தடவை.

நேற்றைய சந்திப்புக்குறித்து கேணல் சொர்ணம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது:-

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கும் எங்களுக்குமிடையிலான இச்சந்திப்பில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நாங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கின்றோம் என்பது தொடர்பாகவும் சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கண்காணிப்புக்குழுவினர் சில வேலைத் திட்டங்களை இங்கு முதன்மைப் படுத்திச் செய்யவேண்டும் என்பது தொடர்பாகவும் நாங்கள் ஆராய்ந்தோம்.

பாதிக்கப்பட்டு முகாம்களில் இருக்கும் மக்களின் நலன்களைக் கவனிப்பதற்குப் படையினர் அந்த முகாம்களைப் பொறுப்பேற்க உள்ளமையை ஏற்கமுடியாது எனவும் நாங்கள் இச்சந்திப்பின் போது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரிடம் வலியுறுத்தினோம். அதனை அவர் ஏற்றுக்கொண்டார் என எங்களிடம் தெரிவித்தார் - இவ்வாறு சொர்ணம் தெரிவித்தார். (எ-க-7-12)


COMPUTER COURSES
New Batch
Batch - III
January 23

பிறைநதீன் கல்வி நிலையம்
சாவகச்சேரி.
A/L 2007 கலை, வர்த்தக, கணித பிரிவு வகுப்புகள்
ஆரம்பம்:-19.01.2005 புதன் 3.00 p.m.
யாழ் முன்னணி ஆசிரியர் குழு

| | |
|---|---|
| Tam. | நாக. தமிழிந்திரன் |
| Hin.Ca. | P. ஜோதீஸ்வரன் |
| Eco. | K. உதயன் |
| Geo. | S.R.பாலா |
| Log. | S.R.J.சுதன் |
| Com. | S. யசோ |
| Acc. | S. சயந்தன் |
| His. | K. விக்கி |
| Dra. | கனகேஸ்வரன் |
| Phy. | K. ரமேஸ் |
| Che. | K. பவான் |
| Co. Mat. | A. கதிர் |

(40828)

வணிகக் கல்வி
A/L 2007
V
விக்னா யாழ்
ம்
ர
வி
B.B.A(Fm.spl)
ஜனவரி 16
7.30a.m

LOGIC
BRIGHTMAN
நாவலர் வீதி.
A/L 2006 - சனி, ஞாயிறு 1 p.m.
A/L 2007 - சனி, ஞாயிறு 11 a.m.
2006 - பகுதி II விரைவில்
By: P.கமல் (40689)

Dip in Hardware
Period- 42 Hours Time 09.30 - 16.30
7 days (Full time)
மிகக் குறுகியகால், மிகப் பயன்மிக்க இப் பாடநெறியில் ஆரம்ப அறிவுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. ஒரு குழுவில் 7 மாணவர்களே உள்ளடக்கப்படுவதால் பதிவுகளிற்கு முந்துங்கள்.
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam,
T.P:021-222-2674

தமிழர் தைத்திருநாளில் எங்கள் வாழ்த்து உவகையுடன்
Free
ஒவ்வொரு கணனியுடனும் நவீன கொம்பியூட்டர் மேசை, பில்டர் கிளாஸ், மவுஸ் பாட் மற்றும் டஸ்ற் கவர்
UNIT
எமது விளம்பரத்தை..... 18 பக்கம் பார்க்கவும்

கணக்கீடு புதிய பிரிவு
A/L 2005/Day மீண்டும்
★ கம்பனி ★ கிரயக்கணக்கீடு ★ பங்குடமை
ஆரம்பம்: திங்கள், நேரம்: அலுவலகத்தில்
★ NEW SCIENCE COLLEGE JAFFNA
★ SHAMROCK JAFFNA
ஆசிரியர்: S. தவா
B.Com (Hons) (Acc.spl)
(அதிக நேரம் கூடுதலான வகுப்புகள் இடம்பெறும்.)
(40820)

EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.